Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 மாசி-29 13-03-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 23



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123, பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464

இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-11456)

# மக்கள் மீதான படையினரின் தாக்குதலை கண்டித்து சாவகச்சேரியில் வீதி மறியல்!

## நேற்று இரண்டாவது நாளாகவும் போராட்டம்

(தென்மராட்சி)

**சாவகச்சேரியில் இரண்டாவது நாளாக நேற்றும் மக்கள் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தைத் தொடர்ந்து படையினர் பொதுமக்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்தினர். அத்துடன் பல உந்துருளிகள், ஈருருளிகள் என்பனவற்றையும் அடித்துச் சேதப்படுத்தியிருந்தனர். இத்தாக்குதல்களைக் கண்டித்து நடத்தப்பட்ட போராட்டத்தின் போது ஏ-9 பிரதான வீதி படையினரின் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டது. அத்துடன் இராணுவக் காவலரண்களும் எரியூட்டப்பட்டன.**

நேற்று முன்தினம் படையினரது வாகனம் உந்துருளியை மோதியதை யடுத்து படையினர் நடத்திய தூக்குதலின்போது 15 இற்கும் அதிகமான பொதுமக்களினது துவிசசக்கர வண்டிகளும், பெறுமதி வாய்ந்த நான்கு உந்துருளிகளும் அடித்து முற்றாக நாசமாக்கப்பட்டிருந்தன. பொலிசாருடன் இணைந்து படையினரே பழிவாங் கும் நோக்கினில் இச்செயலில் ஈடுபட்டதாகக் கூறியே மீண்டும் நேற்றுப் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தினில் குதித்தனர்.

முன்னதாக முகமாலைக்கான சேவையில் ஈடுபட்டிருந்த வடபிராந்

(12ஆம் பக்கம் பார்க்க)



நோர்வேயில் விடுதலைப்புலிகளின் அரசியல்குழுவுடன் நோர்வேப் பிரதிநிதிகள் சந்திப்பு.



## மன்னாரில் படையினரின் அடாவடி குறித்து கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் எடுத்துரைப்பு

(மன்னார்)

மன்னாரில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும், அரசியல்துறையினருக்குமிடையில் நேற்று முன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

மன்னார் மாவட்ட கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. இதில் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன், மன்னார் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மன்னாரில் அண்மைக் காலங்களாகசிறிலங்காப் படையினர் புரியும் அடாவடித்தனங்கள், விடு

(12ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகள் தொடர்பாக ஆராய்வு

(மன்னார்)

இந்தியாவிலிருந்து மன்னார் ஊடாக தாயகம் திரும்பும் அகதிகள் சம்பந்தமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நேற்று முன்தினம் மாலை மன்னார் அரச செயலகத்தில் சந்திப்பொன்று இடம் பெற்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# அன்ரன் பாலசிங்கத்தின் "போரும் சமாதானமும்" ஆங்கில நூல் கனடாவில் சிறப்புற வெளியீடு

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எழுதிய "போரும் சமாதானமும்" எனும் ஆங்கில நூல் கனடா "ஸ்காபரோ' நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இவ் வரலாற்று ஆவண நூல் மண்டபம் நிறைந்த மக்களிடையே வெகு சிறப்பாக வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வை ரி.பிரகலாதன் அவர்கள் வழி நடத்தினார். நேரு குணரத்தினம் நூலாசிரியர் அன்ரன் பாலசிங்கத்தை அறிமுகம் செய்து வைத்தார்.

தமிழீழ வரலாற்றை ஆரம்பத்திலிருந்து இன்று வரை தெளிவாக அறிந்து வைத்துள்ள ஒரே ஒருவர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். தொடர்ந்து அருட் கலாநிதி சந்திரகாந்தன், சுயநிர்ணய உரிமைக்கான 'தமிழரின்' போராட்ட ஆரம்பமும் வரலாறும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இல் அறிமுக விழா

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எழுதிய "போரும் சமாதானமும்" எனும் நூலின் அறிமுகவிழா எதிர்வரும் சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த இ.புவிராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வாழ்த்துரையினை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் அவர்களும், முன்னாள் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவரும், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான செ. கஜேந்திரன் அவர்களும் நிகழ்த்துவர்.



(படம் : எழிலன்)

## அடிப்படை வசதிகளற்ற குடும்பங்களுடன் மன்னார் அரசியல்துறை சந்திப்பு

(மன்னார்)

மன்னார் இரண்டாம் கட்டைப் பகுதியில் பல வருடங்களாக அடிப்படை வசதிகள் இன்றி வாழும் குடும்பங்களை மன்னார் மாவட்ட அரசியல்துறையினர் சென்று பார்வையிட்டுள்ளனர்.

நேற்றுப்பகல் 11.00 மணியளவில் மன்னார் அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன், மன்னார் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் சென்று அங்குள்ள ஐம்பது குடும்பங்களைப் பார்வையிட்டனர்.

இக்குடும்பங்களின் வளர்ச்சி தொடர்பாக உரியவர்களிடம் தொடர்பு கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக மன்னார் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆராய்ந்தார். (18)


### வரிவிளம்பரம்

**தவறிவிட்டது**

அந்தோனிப்பிள்ளை சகாய மோகன் 59 கென்னடிவீதி நாவாந்துறை யாழ்ப்பாணம் என்பவரின் தேசியஅடையாள அட்டை முகமாலைக்கும்பளைக்குமிடையில் 11.03.2005 காலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது சிமாட் தையலகம் கிளிநொச்சியில் ஒப்படைக்கவும். தகவல்:-அ.சகாய மோகன். (5792)


## புதுக்குடியிருப்புப் பகுதி பாடசாலைகளில் மாணவர்களுக்கு வீதிஒழுங்கு கருத்தூட்டல்

தமிழீழ காவல்துறையினரால் புதுக்குடியிருப்புப் பகுதி பாடசாலைகளில் மாணவர்களுக்கான வீதிஒழுங்கு கருத்தூட்டல்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

பெற்றோர்களாலும், ஆசிரியர்களாலும் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய புதுக்குடியிருப்பு காவல்பணிமனையில் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப்பொறுப்பாளர் சி.பிரதீப்குமாரினால் கடந்த புதன் கிழமை கொக்குளாய் தமிழ்க்கலவன் பாடசாலையிலும், நேற்று முன் தினம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும் வீதிப்போக்குவரத்து ஒழுங்குவிதிகள் பற்றிய கருத்தூட்டல்கள் நடாத்தப்பட்டன.

அண்மைக்காலத்தில் புதுக்குடியிருப்புப் பகுதிகளில் சில பிரதான வீதிகள் திருத்தம் செ[illegible]ப்பட்டுள்ளதுடன், வாகனப்ப[illegible]னையும் பல மடங்கு அதிகரித்தும் காணப்படுகின்றது. இதனால் வீதிவிபத்தில் இருந்து பொதுமக்களையும், முக்கியமாக [illegible]ாணவசமூகத்தையும் காப்பதற்காக இவ்வாறான முற்காப்பு நடவடிக்கை களில் காவல்துறையினர் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.




## தமிழீழ மாவட்ட நீதிமன்று-செயபுரம்

வழக்கிலக்கம்:-124/2005
தன்மை:-மணநீக்கம்

திருமதி.சூரியகுமார் தர்சினி
வித்திகுடியிருப்பு
நாச்சிக்குடா(வழக்காளி)

எதிர்:-
திரு,சிங்கமுத்து சூரியகுமார்
அம்பலப்பெருமாள்சந்தி
அக்கராயன்(எதிராளி)

### பகிரங்க அறிவித்தல்

மேலே பெயர்முகவரியிடப்பட்ட எதிராளிக்கு,

இவ்வழக்கின் வழக்காளியானவர் உமக்கெதிராக இம் மணநீக்க வழக்கைத் தாக்கல் செய்திருந்த போது மன்று உமக்கான அழைப்பாணை, வழக்கறிக்கை என்பவற்றை சேர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தபோது, நீர் குறித்தமுகவரியில் இல்லாது வேறு முகவரிக்கு சென்றிருப்பதாகவும், உமது சரியான முகவரி கிடைக்காமையாலும், உமக்கு இப்பகிரங்க அறிவித்தல் மன்றின் 04/03/2005 அன்றைய நாளேட்டுக்கட்டளைப்படி பிறப்பிக்கப்படுகின்றது. உமக்கு இம் மணநீக்க வழக்குத் தொடர்பில் எதிர்வாதம் செய்ய நியாயமான சந்தர்ப்பம் வழங்கி, இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 21 நாளைக்குள் மன்றில் தோன்றுமாறு கேட்கப்படுகின்றீர். நீரோ, உமதுநிலையில் அக்கறையுடையோரோ இவ்வறிவித்தல் கிடைத்ததற்கமைய உரியூ காலத்தில் மன்றில்தோன்றத் தவறும் பட்சத்தில், இவ்வழக்கானது குடியியல் சட்ட நியாயங்களின் படி ஒருமுக விளக்கத்துக்குவிடப்பட்டு: தொடர்சட்ட நடவடிக்கைகள் ஊடாக தீர்ப்புவழங்கப்படும். என்பதையும் இப் பகிரங்க அறிவித்தல் ஊடாக அறியத்தருகின்றோம்.

மன்றின் கட்டளைப்படி

பொ.சுப்பிரமணியம்,
பதிவாளர்,
தமிழீழமாவட்ட நீதிமன்று,
மன்னார்,
செயபுரம்.

வரைந்தவர்
வழக்காளியின் சட்டத்தரணி
திரு.இரா.சரவணபவானந்தன்
பூநகரி கிளிநொச்சி. (சி.11558)


## கிராமிய அபிவிருத்தி வங்கியின் 12 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

(கிளிநொச்சி)

கிராமிய அபிவிருத்தி வங்கியின் 12 ஆம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வுகள் சிறப்புற இடம் பெறவுள்ளன.

மன்னார், பூநகரி, முல்லைத்தீவு, மல்லாவி, வவுனியா ஆகிய கிளைகளில் நாளை சிறப்பு நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

இந்த வகையில் நாளை மதியம் 12 மணியளவில் மன்னார் கிளையில் நகை அடகு ஆரம்ப நிகழ்வும், முல்லைத்தீவு கிளையினூடாக பிற்பகல் 2.00 மணியளவில் கற்சிலைமடு பாடசாலையில் கடன்வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

பூநகரி கிளையில் நண்பகல் 12.00 மணியளவில் சூரிய மின்கலம், தையல்இயந்திரம் மற்றும் நீர் இறைக்கும் பம்பிஆகியன வழங்கும் நிகழ்வு இடம்பெறும்,

மல்லாவி கிளையில் காலை 8.30 மணியளவில் சுயமுயற்சிக் கடன் வழங்கல் நிகழ்வு இடம் பெறும்.

வவுனியா கிளையினூடாக முற்பகல் 11 மணியளவில் நெடுங்கேணி விவசாயப் போதனாசிரியர் நிலையத்தில் நீர்ப்பம்பி, சூரிய மின்கலம் ஆகியன வழங்கும் நிகழ்வு நடை பெறவுள்ளது. அத்துடன் இக் கிளைகளில் தளிர் சேமிப்புக்கணக்கில் ரூபா இரண்டாயிரத்து ஐநூறிற்கு மேற்பட்ட பணத்தினை சேமிப்பிலிட்டு கணக்காளர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக வங்கியின் பொது மேலா[illegible]ர் தெரிவித்துள்ளார்.

## பேருந்து [illegible]டம் புரண்டது

(ஒட்டுசுட்டான்)

முத்தையன் கட்டில் இருந்து புதுக்குடியிருப்புக்குச் செல்லும் பேருந்து வீதியை விட்டு விலகி தடம் புரண்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் மாலிகா வயல் வெளி எனும் இடத்தில் இந்தப் பேருந்து பாதையை விட்டு விலகி அருகில் உள்ள வயலுக்குள் பாய்ந்து தடம் புரண்டுள்ளது. பயணிகளுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. (05)

### சேவை நலன் பாராட்டுவிழா

(மல்லாவி)

முல்லைத்தீவு விவசாயத் திணைக்கள உதவி ஆணையாளரின் சேவைநலன் பாராட்டு விழாநிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது.

பாண்டியன்குள கமநல சேவைநிலையத்தில் இடம் பெற்ற இந்நிகழ்வுக்கு கமக்கார அமைப்பு அபிவிருத்திக்குழுத் தலைவர் வரதராஜா தலைமை தாங்கினார்.


இங்கு பாராட்டு உரைகளை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பாலசுப்பிரமணியம், பாண்டியன் குளம் கிராம சேவையாளர் சுந்தரலிங்கம் ஆகியோர் உட்பட பலர்வழங்கினர். (24)


## திருமணக்கார்

வன்னிப்பெருநிலப்பரபிற்கும், குளிரூட்டப்பட்ட ஜப்பான் கார் திருமணத்தேவைகளுக்கு. வாடகைக்குண்டு. தொடர்பு-396,கையிலாயபிள்ளையார் கோவிலடி, உதயன் விருந்தினர் விடுதி ஒழுங்கை, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல:0777283795
(எந்நேரமும்)
021-222 6286
(5370) (இரவுமட்டும்)


## என்றென்றும் நினைவில் 1 ஆம் ஆண்டு

உதிர்வு 13 - 03 - 2004



மலர்வு 05 - 01 - 1970

நாட்டுப்பற்றாளர்

### அமரர் பொன்னுத்துரை ஸ்ரீதரன்


(மருந்து-பால்மா வகைகள்-நடுவப்பணிமனை பணியாளர்)

எம்வாழ்வின் ஒளிவிளக்கே
அணையாத அகல்விளக்கே
எங்குசென்றீர்கள் யாரிடம் தூது சொல்வேன்?
உங்கள் வரவுதனை எதிர்பார்த்து இருந்தவேளை
வந்ததுவோ செய்தி அது
ஓடிமறைந்ததுவோ ஓராண்டு காலம்
ஓயவில்லை எம்கண்ணீரின் வேகம்-ஐயா
உங்கள் மழலையவள் அப்பா என்றழைக்க
யான் செய்வதறியாது தவிக்கின்றேனய்யா!
மாறுமா இத்துயரம் மறக்குமா உங்கள் நினைவுகள்
நின் நினைவைச் சுமந்து நிற்கும்.

அன்பு மனைவி,
ஆசைமகள்.

(5495)

## சாவு அறிவித்தல்



### செபமாலை முத்து ஜெபநேசன்

(றெக்சன்)

தாயின் மடியில் 1977-12-15

இறைவனின் மடியில் 2005-02-22

இரணைப்பாலையைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரான்சில் வசித்து வந்தவருமான செபமாலைமுத்து ஜெபநேசன் (றெக்சன்) அவர்கள் 22.02.2005 அன்று பிரான்சில் அகாலமரணமடைந்தார். அன்னார் செபமாலை முத்து திரேசம்மா தம்பதிகளின் அன்புமகனும், காலம் சென்ற மார்சலா(ஜெனி), நிலானி, சித்திரா, றீகன், சிந்தனா ஆகியோரின் அன்புச்சகோதரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 12.03.2005 சனிக்கிழமை நேற்று அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 13.03.2005 (இன்று)பி.ப 2.00 மணிக்கு புனிதபற்றிமா அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்
செபமாலை முத்து
(அருமைநாயகம்)

(5795)

# வயோதிப மாது மீதான சிப்பாயின் செயல் தமிழ்ப் பெண்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது!

## -யாழ்.மாவட்ட வி. நு. கூ.சங்கங்களின் சமாசம்.

(யாழ்ப்பாணம்)

**வயோதிப மாதுக்களை வணக்கத்திற்குரியவர்களாகப் போற்றும் தமிழர்களது பாரம்பரியத்தில் சிங்களச்சிப்பாயொருவர் மிகக் கேவலமாக நடந்துள்ளமையானது தமிழ்ப் பெண்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது என யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பாக சமாசம் வெளியிட்டுள்ள அறிக்கையில்;

நீரவேலிப் பகுதி வீடொன்றிற்குள் சிங்கள இராணுவச் சிப்பாய் ஒருவர் புகுந்து அங்கிருந்த வயோதிபப் பெண்மீது பாலியல் வல்லுறவுக்கு முயற்சித்த செயலானது மிகவும் கண்டனத் திற்குரியது.

வணக்கத்திற்குரிய தாயாக போற்றி மதிக்கப்படும் அறுபத்தி மூன்று வயதுடைய பெண்ணை பலாத்கார பாலுறவிற்கு உட்படுத்தி கொலை செய்ய முயற்சித்தமையானது சிங்கள இராணுவம் காமவெறி பிடித்து அலைவதையே எடுத்துக் காட்டுகிறது.

தமிழர் தாயகத்தில் சிங்கள இராணுவம் இருக்கும் வரை பாதுகாப்பு இல்லை என்பது இதன் மூலம் வெளிப்படையாகத் தெரிகிறது.

வடக்கு -கிழக்கை விட்டு இராணுவம் வெளியேறினால்தான் தமிழர்கள் நிம்மதியாகவும் கௌரவமாகவும் வாழமுடியு மென்பதை இதன் மூலம் நாம் அறியமுடிகிறது. எதிர் காலத்தில் சிங்கள இராணுவம் தமிழ்ப்பெண்கள் மீது இவ்வாறான செயல்களில் ஈடுபடுமானால் தமிழ்ப்பெண்களே இராணுவத்தை துரத்தி அடிப் பார்கள் என்பது திண்ணம்.

இந்த மிருகத்தனமான நடவடிக்கையை கண்டித்து நாளை பொது அமைப்புக்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கண்டனப் பேரணிக்கு கூட்டுறவாளர்கள் அனைவரும் தமது ஆதரவைத் தெரிவிப்பதுடன் அனைத்து ப.நே.கூ. சங்கங்கள் மற்றும் ஏனைய கூட்டுறவுச் சங்கங்களும் தமது தலைமைக்காரியாலயங்களை மூடி அனைத்துப் பணியாளர்களும் பேரணியில் கலந்து தமது எதிர்ப்பை தெரிவிக்குமாறு யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## கைதான சிப்பாய்; விளக்கமறியலில்

யாழ். நீர்வேலிப்பகுதியில் வயோதிபப் பெண்மணி மீது பாலியல் வல்லுறவு முயற்சியில் ஈடுபட்ட படைச்சிப்பாய் நாளைவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நீர்வேலிப்பகுதியில் தனிமையில் இருந்த வயோதிபப் பெண்மணி மீது பாலியல் வல்லுறவு முயற்சியில் ஈடுபட்டவேளை மக்களால் துரத்தப்பட்டு காங்கேசன்துறை படைமுகாமில் ஒளிந்திருந்த வேளை படையினரால் கைது செய்யப்பட்டார்.

இவர் யாழ். நீதிமன்றத்தில் மேலதிக நீதிபதி திருமதி. சிறிநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்ப் படுத்தப்பட்டார். அதன்போது நாளை வரை இவரை தடுப்புக்காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். நாளை அப் படைசிப்பாய் அடையாள அணிவகுப்பிற்கும் உட்படுத்தப்படுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அப்பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.



யாழ்.கல்வியங்காடு பொதுச்சந்தை வளாகத்தினுள் பருத்தித்துறை வீதியோரமாக அமைக் கப்பட்டுள்ள புதிய கட்டடத்தொகுதியில் அண்மைக்காலமாக சிறிலங்கா இராணுவத்தினர் பகலில் நிலைகொண்டுள்ளனர்.

(படப்பிடிப்பு:- சுஜீவன்)

## தென்மராட்சிப் பகுதியில் படையினரின் ரோந்து அதிகரிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் சிறிலங்காப் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் கடந்த இரு வாரங்களாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

எழுதுமட்டுவாள், உசன், மிருசுவில் பகுதிகள் தொடக்கம் கைதடி, நாவற்குழி பகுதிகள் வரை படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

இதனால் மக்கள் மத்தியில் பயப்பீதியும், அச்ச உணர்வும் காணப்படுகின்றது. படையினரின் அதிகரித்த ரோந்து நடவடிக்கையால் விபத்துக்களும் அதிகரிக்கும் நிலை காணப்படுகின்றது. (28)

## அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் மாணவர்களுக்கு உதவி

(வடமராட்சி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ். வடமராட்சி வடக்கு பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி மேம்பாட்டு உதவிகளை வழங்குவதில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்ந்துவரும் இடைத்தங்கல் முகாம்களில் வசித்துவரும் 289 வடமராட்சி வடக்கு பிரதேச மாணவர்களுக்கு எழுதுகருவிகள், அப்பியாசக் கொப்பிகள் மற்றும் கல்வி உபகரணங்கள் என்பவற்றை வழங்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்டமாணவர்களின் கல்வி மேம்பாடுகளைக் கவனத்தில் கொண்டே இவ் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (33)

## பட்டினிக்கு எதிரான இயக்கம்; இளைஞர் , யுவதிகளுக்குப் பயிற்சி

(தீவகம்)

யாழ்.தீவகப் பகுதியில் உள்ள மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கான தொழில் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்களது வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தும் நடவடிக்கைகளில் பட்டினிக்கு எதிரான இயக்கம் எனும் அரசசார்பற்ற நிறுவனம் ஈடுபட்டுவருகிறது.

இதில் கடற்றொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு படகு இயந்திரங்களைத் திருத்துதல் மற்றும் கடற்றொழில் உபகரணங்களைப் பழுதுபார்க்கும் பயிற்சிகளை வழங்கி வருகின்றனர்.

யுவதிகளுக்கு வலைகளை வடிவமைத்தல் மற்றும் வலைகளைச் சீரமைத்தல் போன்ற பயிற்சிகளை வழங்கி வருகின்றனர். (33)

## இன்று மனையியல் கண்காட்சி

(உடுவில்)

வடக்குக்கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி சங்கத்தின் அனுசரணையுடன் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவு மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல் மனையியல் கண்காட்சி இன்று காலை 10.00 மணிமுதல் இடம்பெறவுள்ளது.

உடுவில் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜீ.ரி.ஞானசேகரவேல் தலைமையில் ஏழாலை மகாவித்தியாலயத்தில் இக் கண்காட்சி இடம் பெறவுள்ளது. (41)

## அச்சுவேலி வைத்தியசாலையில் மருந்துக்குத் தட்டுப்பாடு

(அச்சுவேலி)

யாழ். அச்சுவேலி வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்துப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவிவருகிறது. இவ்வைத்தியசாலைக்கான மருந்துப் பொருட்கள் விநியோகத்திலுள்ள குறைபாடுகளால் இத்தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

இதனால் இவ்வைத்தியசாலைக்கு வரும்நோயாளர்கள் வைத்தியர்களால் எழுதிக் கொடுக்கப்படும் மருந்துகளை வெளியே உள்ள தனியார் மருந்துக்கடைகளிலேயே வாங்கிப் பயன் படுத்துகின்றனர். (33)

## வருடாந்த மகோற்சவம்

(இளவாலை)

இளவாலை வடக்கு அருள்மிகு ஆனை விழுந்தான் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் திருவிழா நடைபெற்று பூங்காவனத் திருவிழா நிகழ்வுடன் நிறைவு பெறும். (சு)

## அடையாள அட்டைகள் 3872 இற்கு மீள் விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுனாமி அனர்த்தம் காரணமாக ஆள் ஆடையாள அட்டைகளை இழந்த 3872 பேர் தமது ஆள் அடையாள அட்டைகளை மீள பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

இதில் பருத்தித்துறை பிரதேச செயலகம் ஊடாக 1831 பேரும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர்பணிமனையூடாக 2041 பேரும் தமது அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர். இதேவேளை அடையாள அட்டைகள் இல்லாதவர்கள் தமக்கான நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் பலவித சிக்கல்களையும் எதிர் நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (33)

## வெங்காயத்தில் ஊதாப்புள்ளி நோய்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டில் விவசாயிகளால் பயிரிடப் பட்டிருக்கும் வெங்காயப் பயிர்களுக்கு ஊதாப் புள்ளி நோய் பரவி வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

காலநிலை சீரின்மையால் ஏற்பட்டிருக்கும் இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கான நாசினிகள் மற்றும் இடு பொருட்களைப் பெறுவதில் பல இடர்பாடுகள் உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் இம்முறை யாழ். குடா நாட்டின் வெங்காயப்பயிர்ச் செய்கையில் வீழ்ச்சி ஏற்படக் கூடிய அபாயமுள்ளதாகவும் விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். (33)



யாழ். நீர்வேலிப் பகுதியில் பரவலாக பார்த்தீனியம் செடிகள் காணப்படுகின்றன.

*(படப்பிடிப்பு:- சுஜீவன்)*

## வர்த்தகரின் வீட்டின் மீது; கொடிகாமத்தில் கிரனைட் வீச்சு

(கொடிகாமம்)

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் உள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் உந்துருளியில் வந்த இனம் தெரியாத நபர்களினால் கிரனைட் வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்ற பொழுது குடும்பத்தினர் அனைவரும் வீட்டினுள் இருந்துள்ளனர். வீசப்பட்ட கிரனைட் வீட்டின் முற்றத்தில் விழுந்து வெடித்ததால் வீட்டின் கண்ணாடி யன்னல்கள் சேதமடைந்துள்ளதாகவும், உயிரிழப்புக்களோ, காயங்களோ ஏற்படவில்லை எனவும் தெரியவருகிறது. இதுகுறித்துப் பொலிசாரும் , அரசியல் துறையினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றதாக தெரியவருகிறது. (28)


நோர்வேயில் இடம்பெற்ற உயர்மட்டச் சந்திப்பில்

# புனரமைப்புக் கூட்டம்

(மல்லாவி)

பாண்டியன்குளம் பிரதேசத்தில் ஆறு கிராமங்களை உள்ளடக்கிய வர்த்தகர்களுக்கான புனரமைப்புக் கூட்டம் கடந்த வியாழனன்று பிற்பகல் 3.00 மணிக்கு பாலிநகர் பிரதேச அரசியல்துறைச் செயலகத்தில் வர்த்தக சங்க பொருளாளர் சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றது.

கருத்துரைகளைப் பாண்டியன் குளம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இலக்கியன் நிகழ்த்தினார். இந் நிகழ்வில் ஐந்து பேர் கொண்ட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது. (20)

# இளையோர் சமூகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்ற வேண்டிய கடப்பாடு எமக்குள்ளது

## –மக்களுடனான கலந்துரையாடலில் தளபதி ரமணன் கருத்து

(மட்டக்களப்பு)

**“எமது இளையோர் சமூகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்ற வேண்டிய கடப்பாடு எமக்குண்டு. மக்கள் துணிந்து தமது பிரச்சினைகளைச் சுட்டிக்காட்ட வேண்டும்” இவ்வாறு விடுதலைப்புலிகளின் மாவடி முன்மாரிக் கோட்ட இராணுவத் தளபதி ரமணன் தெரிவித்தார்.**

காக்காச்சி வெட்டைப் பிரதேச மக்களுடனான கலந்துரையாடலின் போது மாவடிமுன்மாரிக் கோட்ட இராணுவத் தளபதி மேலும் குறிப்பிடு கையில்.

எமது பிரதேசம் மிகவும் வேகமாக முன்னேற்றப்பட வேண்டும். பாடசாலை மட்டத்தில் விளையாட்டு, கல்வி, கலாசாரம் என்பன கட்டியெழுப்பப்பட வேண்டும். இவற்றுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் பாரியளவு பங்களிப்புக்களைச் செய்யவுள்ளனர். தற்போது செய்து வருகின்றனர். இந்தப் பின் தங்கிய பிரதேசமான காக்காச்சி வெட்டை பாடசாலையின் கட்ட வசதிகளை சிறிலங்கா அரசுகவனிக்கவில்லை, தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை முப்பது இலட்சம் ரூபா நிதியினை ஒரு கட்டடம் அமைப்பதற்கு ஒதுக்கியுள்ளது. எமது இளைய சமூகத்தை கல்வியிலோ ஏனைய துறைகளிலோ முன்னேற்ற வேண்டிய கடமை எமக்குண்டு. மக்கள் துணிந்து தமது பிரச்சினைகளைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

எமது பகுதி மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தப் பல செயற்திட்டங்களை விரைவில் அமுல்படுத்தவுள்ளோம். அவற்றுள் மாணவ, மாணவிகளுக்கான இரவுநேர கற்கை நிலையங்களை ஏற்படுத்தி இவற்றுக்கான ஆசிரியர்களை நியமிக்கவுள்ளோம். விடுதலைப் போராட்டத்தை தலைவர் எமது மக்களுக்காகவே தொடங்கினார். தற்போதும் வெற்றிகரமாக முன்னெடுத்துக் கொண்டு செல்கிறார். எமது பிள்ளைகளை நாம் முன்னேற்றுவதன் மூலம் தான் எமது பிரதேசம் முன்னேற்றப்படும். இப்பிரதேச மக்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு பணம் சம்பாதிக்கின்றபோதும் அவற்றை ஒரு திட்டமிடல் இல்லாது செலவு செய்கின்றனர். இப்படியான வீண் செலவு செய்யும் தன்மை குறைக்கப்பட வேண்டும். சேமிப்புப் பழக்கம் அதிகம் உண்டாக்கப்பட வேண்டும். அதுமட்டுமன்றி இப்பகுதியில் அனைத்து வளங்களும் செழிப்புமிக்கதாகக் காணப்படுகின்றன. இதனை வைத்துக் கொண்டு எமது பிரதேச விவசாயத்தினையும், நாம் முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். இதனடிப்படையிலேயே எமது தேவைகளை நிறைவு செய்யலாம் எனத் தெரிவித்துள்ளார்.

# வவுனியா முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையங்களின் வலய ஒன்றுகூடல்

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான எஸ். கணேசபாதம் தலைமையில் வவுனியா தெற்கின் தமிழ் சிங்கள, முஸ்லிம் ஆகிய மூவின மக்களையும் உள்ளடக்கிய ஐந்து பிரதேசங்களுக்கான வலயக் கட்டமைப்புத் தெரிவு நடைபெற்றது.


இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளர் எஸ் .டி. மூர்த்தி, சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தலைவர் சேனாதிராசா, செட்டிகுளம் பிரதேசக் கட்டமைப்புத் தலைவர் அருட்திரு. தேவகரன் மற்றும் ஏனைய பிரதேசக் கட்டமைப்புத் தலைவர்கள், முன்பள்ளிப் பிரதேச வலய இணைப்பாளர்கள் கலந்து கொண்டனர். இதில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப்பணிப்பாளர் தனதுரையில் எமது பிரதேச முன்பள்ளி அபிவிருத்தி தொடர்பான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் மேற்கொள்ள சிறப்பான கட்டமைப்பு தெரிவு செய்யப்பட வேண்டும். இக்கட்டமைப்பின் மூலமே எதிர்வரும் காலங்களில் முன்பள்ளிச் சிறார்களைச் சமூகத்திற்கேற்றவாறு ஆளுமை உள்ளவர்களாக உருவாக்க முடியுமென்றும் கூறினார்.

# வீதியைப் புனரமைக்க முன்வருக!

புதுக்குடியிருப்பு உலகளாந்த பிள்ளையார் வீதி பாரிய குன்றும் குழியுமாகவுள்ளதால் பயணத்தின் போது தாம் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

உலகளாந்த பிள்ளையார் கோவிலினூடாக வேணாவில் பகுதியை நோக்கிச் செல்லும் இப்பாதை நீண்ட காலமாக மழை நீரினால் அரிக்கப்பட்டு குன்றும் குழியுமாகக் காணப்படுவதோடு வீதிக்கு அருகே உள்ள குளமொன்றிலிருந்து நீர் வீதியைக் குறுக்கறுத்துப்பாய்ந்து வருவதால் அவ்வீதியினூடாக பயணிக்கவும் பெரும் சிரமமாகவுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதிப் புனரமைப்புத் தொடர்பாக இதுவரை சம்பந்தப்பட்ட எவரும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. எனவே இவ்வீதிஙயத் திருத்தம் செய்ய சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டுமெனவும் அவர்கள் கேட்டுள்ளனர்.(ச)


சுனாமியால் தமது கற்றல் உபகரணங்களை இழந்த முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவர்களுக்கு அரசசார்பற்ற நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட கற்றல் உபகரணங்களை முல்லை வலயக்கல்விப்பணிப்பாளர் மாணவர்களுக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம் :- சசி)

# சமகால அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

பூநகரி முட்கொம்பனில் கடந்த புதன்கிழமை மாலை ஏழு மணியளவில் சமகால அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

இதில் கிராம மாதர் அபிவிருத்திச் சங்கம், ஊரக தேசிய எழுச்சிப் பேரவை, சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுவினர் மற்றும் பொது அமைப்புச் சார்ந்தவர்களும், ஊற்றுப் புலம், காந்திக்கிராமம் ஊரக வளச்சிப் பொறுப்பாளரும் கலந்து கொண்டனர். அக்கராயன் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் ச.திருமாறன் தலைமையில் அகவணக்கத்துடன் நிகழ்வு ஆரம்பமானது.

இதில் கருத்துரையினை அக்கராயன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ச.திருமாறன் வழங்குகையில், எமது தேசவிடுதலை காக்க படையணிகளின் பலத்தைப் பெருக்க வேண்டும் எனக் கூறினார். இந்நிகழ் வில் சிறப்புரையினை கிளிநொச்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சிறி வழங்கினார். இதில்கிராம மக்களின் பங்களிப்பு எழுச்சி என்பன எமது தேச விடுதலையை விரைவு படுத்தும் எனவும் அவ்வுரையில் கூறி னார். இந்நிகழ்வானது 8.30 மணியளவில் இனிதே நிறை வேறியது.

இதேவேளை புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தற்போது பரவலாக சமகால அரசியல் தொடர்பான கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன. இக்கருத்தரங்குகளில் பெருமளவான மக்கள் கலந்து கொள்கின்றனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேசப் பொறுப்பாளர் பிறையாளன், முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் ஈழவன் உட்பட பலர் கலந்து கொண்டு சமகால அரசியல் தொடர்பான கருத்துக்களை வழங்கி வருகின்றனர். மேலும் பளை பச்சிலைப்பள்ளி கோட்டத்துக்கு உட்பட்ட இத்தாவில் கிராமத்தில் இத்தாவில் ஊரக தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் தியாராசா தலைமையில் சமகால அரசியல் கருத் தரங்கு ஒன்று கடந்த திங்களன்று இடம் பெற்றது.

இரவு 7.30 மணிக்கு ஆரம்பமான இக்கருத்தரங்கில் இன்றைய சமகால அரசியல் கருத்துரைகளை பச்சிலைப் பள்ளி கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் புவனேந்திரராசாவும், பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் இ.அசோக்குமாரும் நிகழ்த்தினர். இக்கருத்தரங்கில் சிறப்புரையினை பச்சிலைப் பள்ளி கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அ.கரிகாலன் நிகழ்த்தினார். இக் கருத்தரங்கில் இத்தா வில் கிராம மக்கள் கலந்து கொண்டு சமகால அரசியல் கருத் தரங்குகளில் தெளிவு பெற்றனர்.(08,11)


சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட்சிகிழக்கு மக்களுக்கு அலைன்ஸ் அபிவிருத்தி நிறுவனத்தினரால் உணவல்லாத பொருட்கள் வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்:- சசி)

## வீட்டு முற்றத்தில் விடுதலைக் கானம்

(பூநகரி)


பூநகரி கறுக்காய்த்தீவு அ.த.க பாடசாலையில் “வீட்டு முற்றத்தில் விடுதலைக்கானம்” என்னும் நிகழ்வு ஊரக தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளா சி.சிவப்பிரகாசம் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் தலைமையுரையைத் தொடர்ந்து பூநகரிப் பிரதேசப் பொறுப்பாளர் கலைக்குமரன் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பான கருத்துக்களை விளக்கமாகவும் எடுத்துரைத்தார். அத்துடன் நியாப் திட்டம் தொடர்பான கருத்துரைகளும் வழங்கப்பட்டன. மேலும் பாடசாலையில் படிப்பகம் ஒன்று அமைப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இந்நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (34)


சுனாமிப் பேரலையின் தாக்கத்தால் பாதிப்புற்ற மாணவர்களுக்கு உளவளப் பயிற்சிகளை உளவளத்துறையினர் வழங்கு வதை படத்தில் காணலாம். (படம் :- சசி)


# ஈராக் தாக்குதலில் பாதிக்கப்பட்ட குவைத்துக்கு 1200 கோடி இழப்பீடு வழங்க ஐ.நா ஒப்புதல்



பாக்தாத்தின் வடக்கே ஒரு சக்திவாய்ந்த வெடிபொருள் ஒன்று அமெரிக்க இராணுவ வெடி பொருட்கள் அழிக்கும் குழுவினரால் கண்டுபிடித்து அழிக்கப்பட்டது.

(ஜெனீவா)

**குவைத்தில் 1990இல் ஈராக் தாக்குதல் நடத்திய போது பாதிக்கப்பட்டவர்களுக்கு 1200 கோடி இந்திய ரூபாய்களை இழப்பீடாக அளிப்பதற்கு ஐ.நா இழப்பீட்டு ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.**



இதனால் ஈராக்படைகளிடம் பிடிபட்டு இறந்தவர்கள் குடும்பங்களுக்கு இழப்பீட்டில் பெரும் பகுதி போய்ச் சேரும்.

ஈராக்கின் பிடியில் சிக்கி இறந்த 602 பேர் மற்றும் கண்ணி வெடியில் காயமடைந்த இருவர் குடும்பங்களுக்கு இழப்பீடு அளிப்பதற்காக ரூ.724 கோடி இந்திய ரூபாய்கள் ஒதுக்கப்படுகின்றது என இழப்பீட்டு ஆணையச் செய்தித் தொடர்பாளர் ஜோ சில்ஸ்.தெரிவித்தார், 602 பேரின் குடும்பத்தினர் இவ்வளவு ஆண்டுகளாக அடைந்திருந்த மன வேதனைக்கும் சேர்த்துதான் இந்த இழப்பீடுகள் வழங்கப்படுவதாகவும் சில்ஸ் கூறினார்.

இறந்தவர்களில் பெரும்பாலோனோர் குவைத்தைச் சேர்ந்தவர்கள். இந்தியா, சவுதி அரேபியா, சிரியா, ஈரான், ஜோர்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 30 குடும்பங்களுக்கும் இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று கூறி பட்டியலில் அவர்களது பெயர்களையும் குவைத் அதிகாரிகள் சேர்த்துள்ளனர்.

ஈராக்கின் எண்ணெய் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு இந்த இழப்பீடுகள் வழங்கப்படும். 2003இல் ஆட்சியிலிருந்து சதாம் ஹுசேன் அகற்றப்படுவதற்கு முன்பு இறந்த குவைத் கைதிகளின் எண்ணிக்கையை உறுதி செய்ய ஈராக் மறுப்புத் தெரிவித்திருந்தது.

இதுவரை பல்வேறு நாட்டு அரசுகள், நிறுவனங்கள், தனிநபர்களுக்கு மொத்தம் ரூ.85.500 கோடி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

மொத்தம் ரூ.2.34 லட்சம் கோடி இழப்பீட்டு வழங்க இழப்பீட்டு ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

# தடுப்புக் காவலில் இருந்த நேபாளப் பிரதமர் அந்நாட்டு மன்னரால் விடுதலை செய்யப்பட்டார்



(காத்மண்டு)

நேபாள மன்னரால் சுமார் ஒருமாத காலமாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் நேபாளப் பிரதமர் ஷெர் பக்துர் டெக்பா விடுதலை செய்யப்பட்டார்.

அடுத்த வாரம் அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்த எதிர்க்கட்சி திட்டமிட்டிருப்பதன் விளைவாகவே இவர் விடுதலை செய்யப்பட்டார் என எதிர்க்கட்சி தெரிவிக்கின்றது.

கடந்த பெப்ரவரி முதலாம் திகதி நேபாள மன்னர் அரசைக் கைப்பற்றித் தனது அதிகாரத்தின் கீழ் நிர்வாகத்தை கொண்டு வந்தார். பல அமைச்சர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

தற்போது பிரதமருடன் வீடமைப்பு அமைச்சரும் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கு நேரடிக் காரணங்கள் தெரிவிக்கப் படவில்லையாயினும் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் பெற்ற அழுத்தம் காரணமாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

# ஆசியாவின் பெரும் பணக்காரராக தொழிலதிபர் லட்சுமிமித்தல்

(சிங்கப்பூர்)

ஆசியாவின் பெரும் பணக்காரர் என்ற பெருமையை தொழிலதிபர் லட்சுமிமித்தல் (வயது- 54) பெற்றிருக்கின்றார்.

போர்ப்ஸ் என்ற பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பில் இந்தத் தகவல் தெரிய வந்துள்ளது. இதுவரை இந்த அந்தஸ்திலிருந்த லிகா-சிங்கை பின்னுக்குத் தள்ளி விட்டு மித்தல் முதலிடத்துக்கு முன்னேறியிருக்கிறார். இந்தியாவில் பிறந்து லண்டனில் வசித்து வரும் மித்தலுக்கு பல இரும்பு ஆலைகள் உள்ளன. மித்தல் ஸ்டீல்ஸ் நிறுவனத்தின் நிர்வாகியாக இவர் பதவியிலிருக்கிறார். இவரது சொத்து மதிப்பு 11 இலட்சத்து 25 ஆயிரம் கோடி இந்திய ரூபாய்கள். இவர் உலக பணக்காரர்கள் பில்கேட்ஸ் மற்றும் பெர்க்ஷிர் ஆகியோருக்கு அடுத்த படியாக இருக்கிறார்.




உலகின் மிகப் பெரிய 400 கோடீசுவரர்கள் என ஃபோர்ப்ஸ் இதழ் அறிவித்துள்ள பட்டியலில் முன்னணியில் இருப்பவர்கள் (மேல் வரிசை இடமிருந்து) பில் கேட்ஸ் (முதலிடம்) வாரன்பஃபெட் (இரண்டாம் இடம்) கார்லோஸ் சிலிம் ஹெலு (நான்காம் இடம்) (கீழ் வரிசை இடமிருந்து) பால் ஆலென் (ஏழாம் இடம்) லாரன்ஸ் எல்லிசன் (ஒன்பதாம் இடம்) ராப்சன் வால்டன் (பத்தாம் இடம்)

# 14 ரஷ்ய வீரர்கள் பலி

(மொஸ்கோ)

ரஷ்யாவில் செசன்யா மாநிலத் தலைநகர் குரோஸ்னி அருகே ரஷ்ய இராணுவ உலங்குவானூர்தி விழுந்து நொருங்கியது. இதில் பயணம் செய்த 14 ரஷ்ய வீரர்கள் பலியானார்கள். 2 வீரர்கள் காயமடைந்தனர். அந்த உலங்குவானூர்தி மின்சாரக் கம்பி மீது மோதியதால் இந்த விபத்து நடந்த தாக கூறப்படுகிறது.

உலங்குவானூர்தி மோதியதும் அந்த மாவட்டம் முழுவதும் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டது.



பீஜிங்கில் நியூமோனியாவிலிருந்து தம்மைப் பாதுகாக்க முகமூடி அணிந்துள்ள சீன பிரஜை ஒருவர்.

# பிலிப்பைன்சில் நஞ்சு கலந்த இனிப்பை உண்ட 30 பள்ளி மாணவர்கள் உயிரிழப்பு

பிலிப்பைன்சில் தெருவோரக் கடையில் வாங்கிய இனிப்பில் விஷம் இருந்ததால் 30 பள்ளிக் குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

பிலிப்பைன்சில் மபினியிலுள்ள ஆரம்பப் பள்ளி மாணவர்கள் அவர்கள். மேலும் 80 மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் குறித்து அதிபர் குளோரியா அராயோ வேதனை தெரிவித்துள்ளார். இச் சம்பவத்தில் இறந்தவர்களின் குடும்பத்துக்கு நிவாரண உதவிகளை அறிவித்துள்ளார்.சிகிச்சை பெற்று வருபவர்களை வேறு நல்ல மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லவும் உத்தரவு பிறப்பித்துள்ளார். இச் சம்பவம் குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# புதிய செயற்கை கோளை விண்ணுக்கு ஏவியது யூ.எஸ்

தகவல் தொடர்பு வசதிக்காக புதிய செயற்கை கோளை அமெரிக்கா விண்ணுக்கு அனுப்பியுள்ளது அமெரிக்கா மார்ட்டின் அட்லஸ்-வி ராக்கெட்டில் இந்த செயற்கைகோள் அனுப்பப்பட்டுள்ளது.புளோரிடா மாநிலத்திலுள்ள கேப்கனவராவ் விமானப்படை தளத்திலிருந்து இந்த ராக்கெட் ஏவப்பட்டது. தனியார் துறை சார்பில் இந்தச் செயற்கை கோள் ஏவப்பட்டுள்ளது.

# தென்னாபிரிக்காவில் நிலநடுக்கம் சுரங்கத் தொழிலாளர் ஒருவர் பலி

(டர்பன்)

தென்னாபிரிக்காவிலுள்ள ஸ்டில்'.போண்டீன் என்ற பகுதியில் புதன்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதில் அங்குள்ள தங்கச்சுரங்கம் ஒன்று பாதிக்கப்பட்டது. சுரங்கத் தொழிலாளர்களில் ஒருவர் உயிரிழந்தார். சுரங்கத்தில் சிக்கிய 24 தொழிலாளர்களை மருத்துவர்கள் அடங்கிய மீட்புக் குழுவினர் மீட்டனர். ஒருவரை மட்டும் இன்னும் தேடி வருகின்றனர்.

நில நடுக்கத்தின் அளவு ரிக்டர் அளவு கோலில் 5.3 ஆக பதிவாகியிருந்ததாக நிலநடுக்க மற்றும் புவியியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

# நேபாள அரசு கேட்டுக் கொண்டால் பாகிஸ்தான் ராணுவ உதவி வழங்கும்

மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை சமாளிக்க முடியாமல் திணறும் நேபாளத்துக்கு இராணுவ உதவி அளிப்பதற்கு பாகிஸ்தான் முன் வந்துள்ளது.

அடிப்படை உரிமைகளை ரத்து செய்ததாலும், நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்தியதாலும், அந்த நாட்டுக்கு அளித்து வந்த இராணுவ உதவியை இந்தியாவும், இங்கிலாந்தும் நிறுத்தி விட்டன.

இந்த நிலையில் நேபாளம் கேட்டுக்கொண்டால் நாங்கள் உதவத்தயாராக இருக்கிறோம் என்று நோபளத்துக்கான பாகிஸ்தான் தூதர் ஜமீர் அக்ரம் கூறினார்.



பக்தாத் சாதார் நகரில் மழையிலிருந்து பாதுகாக்க சிறுவர்கள் தமது பாய்களைப்பிடித்த வண்ணம் வெள்ளிக்கிழமை மதிய தொழுகைக்கு காத்து நிற்கின்றனர்.

# புலிகளின் விமானப்படைகுறித்த அரசாங்கத்தின் பரப்புரை ஏன்?

அண்மைய நாட்களாகப் புதிய விடயம்போல பூதாகரமாக வெளிக்கிளம்பிக் கொண்டிருக்கும் "புலிகளிடம் விமானப்படை" எனும் செய்தியின் உள் நோக்கங்கள் பற்றி மிக உன்னிப்பாகப் பார்க்கவேண்டும்.

கடந்த ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் "விடுதலைப்புலிகளிடம் விமானப்படை மற்றும் விமானம் இருப்பது உண்மை. ஓடுபாதை இருப்பதும் உண்மை. இது நீண்ட காலத்திற்கு முன்னர் கட்டி எழுப்பப்பட்டதாகும்." எனத் தெரிவித்திருந்தார்.

புலிகளிடம் விமானம் உள்ளதா எனும் சந்தேகக் கூற்றுகளுக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் கூறிய அந்தக் கூற்று ஆப்பு வைத்தது மட்டுமல்ல விடுதலைப்புலிகளிடம் விமானப்படையுமுள்ளது என்பதை அன்றைய தினம் பகிரங்கமாகவே உலகிற்கு உணர்த்திய நாளாகவும் அமைந்தது என்றே கூறலாம்.

இந்தச் சம்பவம் நடைபெற்று ஒரு ஆண்டு வரப்போகும் நிலையில் அண்மைய காலங்களில் சிறிலங்காப்படைத்துறையினராலும் சரி, மற்றும் அரச தரப்பாலும் சரி, தென்னிலங்கைப் பேரினவாத ஊடகங்களாலும் சரி பரப்பப்பட்டு வருகின்ற புலிகளிடம் விமானம் இருப்பதான செய்தியை நாம் மிகவும் அவதானமாகவே நோக்க வேண்டியுள்ளது. அச்செய்திகளின் உள் நோக்கம் பற்றி நாம் ஆழமாக ஆராய வேண்டியுள்ளது.


தற்போது யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கின்ற இக்காலகட்டத்தில் சிறிலங்காப் படைத்துறையினரின் அத்துமீறிய நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்ற நிலையிலும் சிறிலங்கா அரசியலில் இடம்பெற்று வருகின்ற பேரினவாதமுஸ்தீபுகளின் பின்னணியிலும், போர்நிறுத்த உடன்படிக்கை முறிவடையும் சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ள இக்கால கட்டத்தில் தாமாக போரை ஆரம்பித்துவிட்டதான அபிப்பிராயம் வெளிவந்துவிடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வுடனும், சர்வதேசத்தில் புலிகளிற்கு எதிரான எதிர்ப்புணர்வை ஏற்படுத்தும் முகமான சிறிலங்கா அரசதரப்பினதும், படைத்தரப்பினதும் நடவடிக்கைகளில் ஓர் அங்கமாகவே புலிகளிடம் விமானம் உள்ளதான அதிவேக பரப்புரைகளை நோக்க வேண்டியுள்ளது.

இப்படிப்பட்ட பரப்புரைகள் மூலம் சிறிலங்காப் படைத்துறை எப்படிப்பட்ட அனுகூலத்தைப் பெற முயல்கிறது எனப் பார்த்தால்

* புலிகளிடம் விமானப்படை உள்ளது. அதுவும் கடந்த மூன்றாண்டு யுத்த நிறுத்த காலத்திலேயே புலிகள் விமானப்படையை உருவாக்கினார்கள் எனக் கூறுவதன் மூலம், புலிகள் யுத்தநிறுத்த காலத்தைப் பயன்படுத்தி தமது படைத்துறையைப் வளப்படுத்துகிறார்கள் என சர்வதேசத்திற்குத் தெரிவிக்கலாம். அதேபோல் தாமும் படைத்துறை ரீதியாக வளர சர்வதேசத்தின் அங்கீகாரம் அல்லது உதவி கிடைக்கலாம் எனும் எதிர்பார்ப்பாக இருக்கலாம்

அடுத்து புலிகளிடம் விமானம் இருப்பது சட்ட விரோதமானது எனத் தெரிவிப்பதன் மூலம் சர்வதேசத்தின் வான்பரப்புகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் புலிகளிற்கு எதிராகத் திசைதிருப்பலாம் அல்லது சர்வதேசத்தின் அழுத்தத்தைப் புலிகள் மீது பிரயோகிக்கலாம்.

* புலிகள் யுத்தநிறுத்த காலத்தில்தான் தமது விமானப்படையை உருவாக்கியுள்ளனர் எனக் கூறுவதன் மூலம் தமது படைத்துறை வளர்ச்சிகளையும் நியாயப்படுத்தலாம். அதாவது தமிழர் தாயகப் பகுதிகளில் இடம்பெற்று வருகின்ற இராணுவ முகாம் விஸ்தரிப்பு நடவடிக்கைகளை மூடிமறைக்கலாம் அல்லது நியாயப்படுத்தலாம். இப்படிப்பட்ட பின்புல அனுகூலங்களைப் பெறும் நோக்குடனேயே சிறிலங்காப் படைத்துறை புலிகளிடம் விமானப்படை எனும் பரப்புரையை மேற்கொள்கிறது என்றால் அது பொருத்தமான கூற்றாக இருக்கும். அதேநேரம் இன்னுமொரு விடயத்தையும் இங்கு ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது. அதாவது யுத்தநிறுத்த ஒப்பந்த விதிகளின்படி எந்த ஒரு தரப்பும் மற்றைய தரப்பிடம் நம்பிக்கையூட்டக் கூடிய விதத்தில் செயற்பட வேண்டும் என்றே வலியுறுத்துகிறது.




ஒரு தரப்பின் பகுதிக்குள் மற்றைய தரப்பினர் செல்வதற்குப் பொதுவிதிகள் இருக்கின்றன. எந்த ஒரு தரப்பும் மற்றைய தரப்பை எதிர்த்து இராணுவ நகர்வுகளை அல்லது நடவடிக்கைகளைச் செய்தால் அது யுத்தநிறுத்த மீறலாகவே கருதப்படும். அவ்விடயத்திலே வேவு நடவடிக்கையும் ஒரு இராணுவ நகர்வு அல்லது நடவடிக்கை என்பதே சர்வதேச போர் விதிமுறை. இந்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு சிறிலங்காப் படைத்துறை கடந்த சனவரி மாத நடுப்பகுதியில் வெளியிட்ட ஒரு பரபரப்புத்தகவல் அவர்களது யுத்தநிறுத்த மீறலை அப்பட்டமாகக் காட்டியுள்ளது.

"விடுதலைப்புலிகள் வன்னியில் முன்னர் அமைத்திருந்த விமான ஓடுபாதையைவிட புதிதாக இன்னுமொரு ஓடுபாதையை அமைத்துள்ளார்கள். அந்த ஓடுபாதையில் இரு விமானங்கள் தரித்து நிற்பதை எமது வேவு விமானம் படம்பிடித்துள்ளது" என சிறிலங்காப்படைத் துறை அறிவித்திருந்தது.

இந்த அறிவிப்பிலிருந்து படைத்துறை, புலிகள் சமாதான காலத்தில் பலம் பெறுகிறார்கள் எனக் கூறப்போய், புலிகளின் பகுதிக்குள் வேவுபார்த்தது தெரிகிறது. படைத்துறை இதன்மூலம் யுத்தநிறுத்த மீறலைச் செய்திருக்கிறது என்பதை நாம் இங்கு அவதானிக்க வேண்டும்.

இதைவிடக் கடந்த வருடம் மே மாதம் சிறிலங்காப் படைத்தரப்பு வெளியிட்ட தகவல் ஒன்றில் முல்லைக் கடற்பரப்பில் புலிகளின் விமானமொன்றைத் தாம் கண்டதான செய்தியை வெளியிட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். இப்படியான தொடர் அறிவிப்புகள் மூலம் சிறிலங்காப் படைத்துறையும், அரசதரப்பும் புலிகளைச் சர்வதேசத்தில் இழி நிலைப்படுத்த முயல்கின்றனர். ஆனால் எந்த நாடுகளும் இவ்விடயத் தில் அதிகம் அலட்டிக்கொள்ளாததால் சிறிலங்கா அரசு கொதிப்படைந்துள்ளதாகத் தெரிகிறது.

பிந்திக்கிடைத்த தகவல்களின்படி புலிகள் விமானப்படையை விருத்தி செய்வதாக நோர்வேக்குத் தெரியப்படுத்திய அரசதரப்பு அவ்விடயத்தில் தமது ஆத்திரத்தையும் வெளியிட்டிருப்பதாகவும் தெரிகிறது. இவ்விடயத்தையே காரணம் காட்டி எதிர்கால சமரச முயற்சிகளைப் பின் தள்ளிப்போடலாமென அரசதரப்பு முயல்வது தெளிவாகத் தெரிகிறது.

ஒருபக்கத்தால் புலிகளை வலிந்து போருக்கு இழுக்கும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை வடக்கு- கிழக்குப் பகுதிகளில் மறைமுகமாக மேற்கொண்டு வரும் அரசதரப்பு, மறுபுறத்தே புலிகளை இராணுவ ரீதியில் பலமிழக்கச் செய்ய சர்வதேச அழுத்தங்களைப்

**ப.துஷ்யந்தன்**

பிரயோகிக்க எத்தனிக்கிறது.

இதற்குச் சிறிலங்கா விமானப்படையின் முன்னாள் தளபதி ஹரி குணதிலக்க கடந்த ஆண்டு ஏப்ரல் மாத நடுப்பகுதியில் தெரிவித்த அனுபவக் கருத்துரைகளை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் " புலிகளைப் பலவீனப்படுத்தலாமென அரச தரப்பு நினைப்பது பகற்கனவு போன்றது" எனத் தெரிவித்திருந்தார். இப்படிப்பட்டதெளிவை அரசதரப்பு எப்போதுதான் பெறப்போகின்றதோ?

## விவசாயப் பயிற்சி வகுப்பு நிறைவில் சான்றிதழ், பரிசில் வழங்கல்

(கிளிநொச்சி)

வவுனியா மாவட்டம் கனகராயன் குளப்பிரதேசத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், விவசாயத் திணைக்களம், கால் நடை அபிவிருத்திச்சபை, கமநல சேவைத்திணைக்களம் ஆகியன இணைந்து கனகராயன் குளப்பிரதேசத்திற்கு உட்பட்ட விவசாய ஆர்வலர்களிற்கு மூன்று மாதமாக் நடாத்தி வந்த விவசாயப் பயிற்சி வகுப்பு முடிந்தமைக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அண்மையில் கனராயன்குள பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செயலகத்தில் நடைபெற்றது.

கனகராயன் குளப்பிரதேச இணைப்பாளர் ம.சோதி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொதுச் சுடரினை புளியங்குளம் கோட்ட அரசியல் துறை பொறுப்பாளர் திலீப் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன் ஏற்றிவைத்தார். மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தலைமையுரையினை அடுத்து சிறப்புரையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுபபாளர் சின்னண்ணன் நிகழ்த்தினார்.

அவர் உரையாற்றும்போது "ஒரு தேசத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு பொருண்மியம் முதுகெலும்பாக உள்ளது. மனிதனுக்கு முள்ளந்தண்டு எவ்வளவு முக்கியமோ அதேபோல் எமது நாட்டிற்கும் பொருளாதாரம் முக்கியத்துவம் பெறுகின்றது. எமது மண் எதிரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்து. பொருளாதாரத் தடையால் எம்மையெல்லாம் வலுவிழக்கச் செய்ய முற்பட்டபோதெல்லாம் எமது பொருளாதாரத்தை வென்றெடுத்தவர்கள் எமது விவசாயிகளே! இதற்குக் காரணம் விவசாயிகளின் நலன் கருதி எமது விவசாயிகளை ஊக்குவித்து எமது மண்ணிலே பொருளாதாரத்தை நிலை நாட்டியிருந்தோம். அதற்கமைய விவசாயிகள் அனைவரும் எமது நாட்டைப் பொருளாதார வளமுள்ள நாடாக உருவாக்க முனைப்புடன் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இந் நிகழ்வில் விவசாயப் பயிற்சி வகுப்பில் அதிசிறந்த புள்ளிகளைப் பெற்ற விவசாயிகள் மூவருக்கு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனதுணைப் பொறுப்பாளர் பரிசில்களும், சான்றிதழும் வழங்கிக் கௌரவித்தார். (15)

## பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய முதல்வர் தலைமையில் நடைபெறவுள்ளதால் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை முதல்வர் கேட்டுக்கொண்டுள்ளார்.

(கு)

## வடமராட்சி கிழக்குப் பகுதியில் மூங்கில் வீடுகள் கரையொதுங்கின

(வடமராட்சி கிழக்கு)

ஆழிப்பேரலையின் பின் வடமராட்சி கிழக்கு கடற் கரையோரங்களில் பெருமளவான பிறநாட்டுப் பொருட்கள் கரையொதுங்கியிருந்தன. அதன்படி தெப்பங்கள், தேங்காய், சுடுதண்ணீர்ப் போத்தல், மரக் குற்றிகள், மின்குமிழ்கள், போன்ற பல கரையொதுங்கிய வண்ணமுள் ளன. சிலவற்றில் இந்தோனேஷியா என அடிப்பகுதியில் பெயரிடப் பட்டுள்ளது.

மேலும் வெற்றிலைக்கேணி, பூனைத்தொடுவாய் ஆகிய கிராமங்களில் இரு மூங்கில் வீடுகள் கரையொதுங்கியுள்ளன.இவற்றில் உள்ள மூங்கில்களை வடமராட்சி கிழக்கு மக்கள் பிரித்து எடுத்துத் தமக்கான சவல்,வலி பலகை செய்து வருகின்றார்கள். சுனாமி ஏற்பட்டபோது பிற நாட்டிலிருந்து அடிபட்டுத் தற்போது இவ் இரு மூங்கில் வீடுகளும் கரையொதுங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இதனைப் பெருமளவான மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றார்கள். (11)

## பற்சிகிச்சை உபகரணங்கள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மருத்துவ சங்கத்தினரால் இருபதாயிரம் ரூபா பெறுமதியுடைய பற்சிகிச்சை உபகரணங்கள் மருதங்கேணி வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பெற்றது.

கிளிநொச்சி மருத்தவ சங்கத் தலைவர் வைத்தியகலாநிதி பி.பிறைற்றனால் மாவட்டவைத்தியசாலையில் வைத்து பல்வைத்திய அதிகாரி மா.தவராசாவிடம் மருதங்கேணி வைத்தியசாலைக்கென மேற்படி உபகரணங்கள் கடந்த வெள்ளியன்று கையளிக்கப் பெற்றது. (சோ)

**தம்பி** நாங்கள் எல்லோரும் அண்டைக்கு கோயிலுக்குப் போக வெளிக்கிட்டம் அப்ப என்ர பிள்ளை "எனக்கு காய்ச்சல் குணமாய் கிடக்குது நான் வரேல்ல நீங்கள் போங்கோ" எண்டு சொன்னாள். அப்ப பிள்ளையத் தனிய வீட்டில விட்டுட்டு நானும், மனுசியும், என்ர மற்றப் பெடியனும் சேர்ந்து கோயிலுக்குப் போய் பூசையில நிண்டம் தம்பி.

அப்பத்தான் திடீர் எண்டு சனங்கள் எல்லோரும் கடல் வருகுது எண்டு கத்திக்கொண்டு ஓடி வந்தினம். அதுக்குப்பிறகு பூசையை விட்டுட்டு என்ர பிள்ளையத்தேடி ஓடிவந்து வீட்டப்பாத்தன் வீட்டையே காணேல்ல தம்பி. அதுக்குப்பிறகு எல்லா இடமும் தேடிப் பாத்தன் ஒரு இடமுமே பிள்ளையைக் காணேல்ல இண்டைக்குத் தான் பிள்ளையின்ர பொடியக் கண்டனான் தம்பி

அதன் பிறகு கடற்கரை மணலைக் கிளறி அதனுள் புதைந்திருந்த உடல்களை எடுத்துக் கொண்டிருந்தோம். சிலரது கால்கள் மேலே தெரிந்தன. சிலரது கைகள் மேலே தெரிந்தன. அவற்றை வைத்துத்தான் உடல்கள் புதைந்திருப்பதை இனங்கண்டோம். இப்படியே ஒவ்வொன்றாய் எடுத்துக் கொண்டு போய்க்கொண்டிருக்க வேதக் கோயிலுக்குப் பின்னால் அறுபத்தி நான்காம் ஆண்டு சூறாவளிக் காத்துக்கு மூடுப்பட்டு சுனாமிக்கு வெளிச்ச பாலத்திலே இருந்து ஐயா ஒருவர் கடலைப் பார்த்தபடி அழுது கொண்டிருந்தார்.

அந்தநேரம் சுனாமி மீண்டும் வரப்போகிறது. அனைவரையும் உடனடியாகப் பின்னுக்கு வருமாறு தொடர்பு வந்தது. அதனால் கரையில் இருந்த எல்லோருக்கும் தக வலைச் சொல்லி அனுப்பிக் கொண்டிருந்தோம். அந்த ஐயாவிடமும் இந்தத் தகவலை சொன்னேன்.

போராளிகளில் குறிப்பிட்ட ஆக்களை அனுப்பி விட்டுட்டு கடற்றொழிலார் கூட்டுறவுச் சங்க சமாசத்தடியில நிண்ட பஸ்சுக்கு கிட்டப்போனம்.

அவடத்தடிக்குப் போக பஸ் எல்லாம் கஞ்சல்கள் செருகுப்பட்டுப் போய் இருந்தது. பஸ்சின் நிலை இப்படி இருக்க அதற்குக் கீழே ஒரு பெரிய முதிரைக் குத்தி இருந்தது. அந்தக் குத்தியின் ஒரு புறம்சற்று உயரமாய் இருந்தது. அதனுள் சடலங்கள் ஏதுமிருக்கலாம் என்ற சந்தேகம் எங்களுக்குள் எழுந்தது. அதனால் அதைச் சீர்செய்து அடைந்து கிடந்த கஞ்சல்களைத் தட்டிப்பார்த்த போது அதனுள் ஒரு உருவம் நசிந்தபடி கிடந்தது. நாற்பது வயது மதிக்கத்தக்க ஒரு ஆணின் சடலம்தான் அது.

முடியாதபடி செருகுப்பட்டுக்கிடந்தது எப்படி என்பதை நினைத்துப் பார்த்தால் கடல்தண்ணியின் வேகம் தெரிந்திருக்கும். இறுதியில் "பக்கோக்" காரரிட்டச் (கனரக இயந்திரம்)சொல்லி அவையள் வந்துதான் எடுத்தவையள்.

அதுக்குப்பிறகு கஞ்சல்கள் வந்து அடைஞ்சுபோன இடம் ஒண்டுக்குப்பக்கத்தால நடந்து போக சாதுவாய் மணத்தது. பின்னர் அந்தக்கஞ்சல் அடைஞ்சிருந்த இடத்தைச்சுத்திப்பார்த்தால் ஒண்டுமே தெரியேல்ல. கஞ்சல்களுக்கு நடுவில பொடி கிடந்தது. அதால அந்தளவு கஞ்சலையும் எடுத்தும் பொடிய எடுக்க ஏலாமல் போய்ச்சுது. பின்னர் 'பக்கோ'வில கட்டி ஒரு மாதிரி பொடிய வெளியால எடுத்துப்போட்டம். பொடி முழுக்

கட்டியணைத்தபடி இறந்து போய் இருந்தார். அந்த ஐயாவையும், அவரது அணைப்பிலிருந்த இரண்டு பிள்ளைகளின் நிலையையும் பார்த்துப் பொறுக்கமுடியாமல் இருந்தது.

அதைப்போல ஒரு அம்மா மரத்தக்கட்டிப்பிடித்தபடி இறந்து கிடந்தார். இதேபோல ஒருபாட

## பகுதி-40

சாலைச் சீருடை அணிந்த சின்னப் பொடியன் ஒருவன் அந்தப்பகுதியில் இருந்த கயிறு ஒன்றில் சிக்குப்பட்டு முழங்கால் மற்றப் பக்கமாகத் திரும்பி முறிந்திருந்தது. அப்படிக் கோரமான நிலையில் சடலங்கள் இருந்தன.



*முல்லைத்தீவை நாங்கள் ஆமியிட்ட இருந்து பிடிக்கேக்குள்ள இருந்த கட்டடங்களைக் கூட இப்ப காண ஏலாமல் இருந்தது. ஆமியத்தேடித் தேடித் துரத்தியடித்த இடத்தில எங்கட உறவுகளின்ர உயிரற்ற உடல்களைத் தேடி எடுக்க வேண்டிய நிலை எங்களுக்கு ஏற்பட்டிருந்தது. ஆமியடிச்சபிறகு அழகிய கரையோர நகரம் பிடிபட்டுவிட்டதாய்க் கூடி மகிழ்ந்தோம். மகிழ்ந்த இடத்தில இருந்தே மக்கள் மாண்டுபோனது கண்டு அழுதோம். சண்டைக்காலங்களில் நாங்கள் காண்கின்ற காட்சிகள் எங்களை இன்னும் வேகப்படுத்துவதாய் இருக்கும். ஆனால், இங்கு கண்ட காட்சிகள் எங்களைப் புண்படுத்துவதாய் இருந்தது என சுனாமியால் சுக்குநூறாகிப்போன முல்லை மா நகரில் தொடர் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டு நெஞ்சைப் பிசையும் பல சம்பவங்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த போராளி அசோக் எங்களுடன் பகிர்ந்துகொண்டார். அவர் பகிர்ந்தவை இந்தப்பகுதியிலும் வருகிறது.*



# எமது அழகிய கரையோர நகரத்தின் தோற்றமே முற்றாக மாறிப்போய் விட்டது

பிள் ளைக்கு இப்படி நடந்து போச்சுது என்று அந்தக் கதையை சொல்லி முடித்தார்.

அந்தப் பிள்ளையின் உடலை நாங்கள் எடுப்ப தற்காக அருகில் போனோம் எந்தக் காயங்களும் இல்லை. பிள்ளையின் உடல் பழு தடையாமல் அப்படியே இருந்தது. நகைகள் கூட அப்படியே இருந்தன அந்தத் ஐயாவையும் அவரது உயிரற்ற மகளின் சடலத்தையும் பார்க்கின்ற போது வேதனையாக இருந்தது.

இப்படியே எங்கள் மீட்பு நடவடிக்கை தொடர்ந்தது. முழங்காலை விட சற்று மேலான அளவில் ஒரு கிடங்கில் தண்ணிநின்றது. அந்தத் தண்ணிக்குள் ஒரு பருத்த திடகாத்திரமான நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவரது உடல் கிடந்தது. அந்தத் தண்ணியின் மேல் இரத்தப்படை படலமாக இருந்தது. அதற்குள் நாங்கள் இறங்கி அந்தச் சடலத்தை தூக்கினோம். எங்கள் நால்வராலும் அந்தச் சடலத்தை தூக்க முடியவில்லை. அந்தளவு கனதியாக இருந்தது. தண்ணீருக்குள் இருந்ததால் அந்த உடல் பழுதடைந்து போய்விட்டது. பிடிக்கின்ற இடம் எல்லாம் தசைகள் கையோடு வந்தன. என்னசெய்வது? அருகில் இருந்த பாயில் அவரின் உடலை வைத்து தூக்கி உழவு இயந்திரத்தில் ஏற்றி அனுப்பிவிட்டோம்.

அவர் "எல்லாரையும் கொண்டு போட்டுது எனி நான் இருந்து தான் என்ன? என்னையும் கொண்டு போய் பசியாறட்டும் இந்தக் கடல் நான் வரமாட்டன்" என்று பிடிவாதமாக இருந்தார். அவருடன் எவ்வளவோ கதைத்தும் அவர் வரவே இல்லை. பிறகு சுனாமியும் வரவில்லை.



பின்னர் எங்களது பணியை நாங்கள் தொடர்வதற்காக சமாசத்தடியால் வந்துகொண்டிருந்த பொழுது சனங்கள் அதில என்ர மகளின்ர பொடி இருக்குது, அம்மான்ர பொடி இருக்குது, அத எடுத்துத் தாங்கோ தம்பி என்று எங்களிடம் கேட்டார்கள். அவ்வாறான உடல்களை எடுப்பதற்கு ஏற்றமாதிரி எங்கட

அந்தச் சடலத்தை அகற்றிக் கொண்டிருந்த பொழுது பஸ் சின் கீழ்ப்பகுதியைக் குனிந்து பார்த்தேன். டிவரஞ்சர் என்று சொல்லப்படுகின்ற பஸ்சின் இயந் திரப் பகுதிக்குள் இன்னொரு உடல் செருக்குப்படடுப்போய் இருநதது.

இந்த உடலை எப்படி வெளியால் எடுக்க முயல முடியுமே




அப்படியெல்லாம் முயன்றும் இறுதியில் தோற்றுப் போனோம். அந்த உடல் பஸ்சுக்குள் எடுக்க

கவுமே சிதைஞ்சு போய்ச்சுது. தலைமயிரில பிடிச்சுத்தூக்கினால் தலைமயிர் தனியாக வந்தது..

ஐஸ்பக்றிப் பக்கம் போய்ப் பார்த்தம். பெரும் பற்றைகளுக்கு நடுவில் கஞ்சல்கள் எல்லாம் அடைந்துபோய் பெரும் குவியலாக இருந்தது. அதற்குள் சடலங்கள் நிச்சயமாக இருக்கும் என்ற நம்பிக்கையில் எங்களது போராளிகள் கஞ்சல்களை அகற்றி அந்தப் பற்றைகளுக்குள் நுழைந்து ஒவ்வொரு உடல்களாக எடுத்து எடுத்து 25 உடல்கள் வரை மீட்டுவிட்டார்கள்.

இப்படி மீட்கப்படுகின்ற உடல்கள் மிக மோசமாகப் பழுதடைந்து போய் இருந்தன. அதனால் சடலங்களை எரித்துவிடுமாறு பணிக்கப்பட்டது. அந்த இடத்தில் சாத்தியமான, ஆரோக்கியமான செயலும் அதுவாகத்தான் இருந்தது.

சில உடல்களைத் தண்ணிக்குள் வைத்தே எரிக்க வேண்டிய நிலையிருந்தது. அதனால் கழிவொயிலை ஊத்தி அதற்கு மேல் எரியக் கூடிய பொருட்களைப் போட்டு தீமூட்டி எரித்தோம்.

இதற்கிடையில் ஒரு ஐயா தனது இரண்டு பிள்ளைகளைக்

உடல்களை ஒவ்வொன்றாய்த் தேடி எரித்துக்கொண்டிருந்த பொழுது ஒரு சின்னப்பிள்ளையின் சடலம் இருந்தது. அந்த உடலை எடுத்துக்கொண்டு வந்து ஏற்கனவே எரிந்து கொண்டிருந்த உடலுடன் போட்டு எரித்தோம்.

இப்படியே 31 ஆம் திகதியுடன் எங்கள் மீட்பு நடவடிக்கை நிறைவடைந்தது.

முல்லைத்தீவை நாங்கள் அடிச்சுப்பிடிச்சபொழுது தப்பியிருந்த கட்டடங்கள் எதுவும் இப்பயில்லை. சேச் இருந்த நிலை இப்போது மாறிப்போய் இருந்தது.

எங்கள் மக்களின் அழகிய கரையோர நகரம ஆமியிட்ட அம்பிட்டு அழிஞ்சு போய்ச்சுதெண்டு நினைச்சுக் கவலைப்பட்டம். ஆனால் இப்ப அந்த நகரத்தில இருந்த கட்டடமும் இல்ல. ஆக்களும் இல்ல. சனத்தின்ர உடலைக்கூடதேடி அலைந்து

**அ.லோகீசன்**

எடுக்கவேண்டிய நிலைக்குள்ளிருந்தோம்.

ஒவ்வொரு ஆமியாய்த் தேடித் தேடி துரத்தியடித்த இடத்தில் எங்கள் உறவுகளின் உயிரற்ற உடலைத்தேடி அலைந்து மீட்க வேண்டிய துயர நிலைக்குள்தள்ளப்பட்டோம். இவ்வாறு தனது வேதனை மிக்க மீட்பு அனுபவத்தை எங்களுடன் பகிர்ந்து கொண்டார் அந்தப் போராளி.

தொடரும்

# ராணுவச் சிப்பாயின் மரணம் தற்கொலையெனச் சந்தேகம்

ஓமந்தை காட்டுப்பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட இராணுவ கோப்ரல் தற்கொலை செய்துள்ளதாக தெரிய வருகிறது. சமிந்த குமார தர்மதாஸ என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவர் கடந்த 19ம் திகதி கொக்குவெளி இராணுவ முகாமில் 17 படைவீரர்களுக்கு விஷமூட்டியதான சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்துள்ளார். இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் மீட்கப்பட்ட இவரின் சடலம் கண்டி வைத்தியசாலைக்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டு அதன் அறிக்கை வவுனியாப் பொலிசாருக்கு கிடைத்துள்ளது.

இதனடிப்படையில் சடலத்தின் எந்த ஒரு இடத்திலும் தாக்கப்பட்ட அடையாளம் காணப்படவில்லை.

எனவே இது தற்கொலையாக இருக்கலாமென மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

# சனாதிபதி செயலகஅதிகாரி லஞ்சக்குற்றச்சாட்டில் கைது

(கொழும்பு)

சனாதிபதி செயலகத்தில் கடமையாற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் மலேசிய நாட்டில் தொழில் பெற்று தருவதாகக் கூறி கை லஞ்சமாக ரூபா 10,000பெற்றுக்கொண்டுள்ளார்.

பொலிசாருக்கு கிடைத்த ரகசியத் தகவலின்படி இந்த உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரை எதிர்வரும் ஏப்பிரல்மாதம் 27ஆம்திகதி கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் ஆஜராக்குமாறு நீதவான் கட்டளை பிறப்பித்துள்ளார்.

# தீ விபத்தில் உடமைகளை இழந்த பொகவந்தலாவை வர்த்தகர்களுக்கு உதவி

பொகவந்தலாவை நகரில் கடந்த மாதம் 16 ஆம் திகதி ஏற்பட்ட தீ விபத்தினால் கடைகள் மற்றும் உடமைகளை இழந்த வர்த்தகர்களுக்குக் குறைந்த வட்டியில் சலுகை அடிப்படையில் வங்கிக் கடன்களை வழங்குவது என சனாதிபதி தலைமையில் இடம்பெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத் தீ விபத்தினால் 46 வர்த்தகர்கள் தமது கடைகளையும் உடமைகளையும் இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் அவர்களுக்கு இதுவரை எந்தவித நஷ்ட ஈடும் வழங்கப்படவில்லை. வங்கிக் கடனும் வழங்கப்படவில்லை. எனவே சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் சலுகை அடிப்படையிலான வங்கிக் கடன் போன்று: கடைகளை இழந்த பொகவந்தலாவை வர்த்தகர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என சமூக அபிவிருத்தி தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் முத்துசிவலிங்கம் அமைச்சரவைக்கு தெரிவித்த யோசனையை அடுத்து ஏற்றுக் கொண்ட அமைச்சரவை அதன் அடிப்படையில் பொகவந்தலாவை வர்த்தகர்களுக்கு வங்கிக் கடன் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# அரசியலமைப்பு திருத்தப் பிரேரணை மீது மே மாத நடுப்பகுதியில் சர்வசன வாக்கெடுப்பு

## -அமைச்சர் அநுராபண்டார நாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் கொண்டுவரவுள்ள அரசியலமைப்பு திருத்தச் சட்டப் பிரரேரணை மீதான சர்வசன வாக்கெடுப்பு மே மாதநடுப்பகுதியளவில் நடைபெறும். சர்வசன வாக்கெடுப்பு நடைபெறும் திகதியை சனாதிபதி அறிவிப்பார் என்று அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு செய்தி ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது, தற்போது நடைமுறையிலுள்ள நிறைவேற்று அதிகாரங்களைக்கொண்டசனாதிப [illegible] முறையை மாற்றியமைத்தல், [illegible]ப் பிரச்சினைக்கான அரசிய[illegible]தீர்வு,தேர்தல் முறையை மாற்றியமைத்தல் போன்ற பல்வேறு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

அரசியலமைப்பு திருத்தத்திற்கு பாராளுமன்றத்தில் முன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் தேவை. அதற்காக ஐக்கிய தேசியக்கட்சியின் ஒத்துழைப்பைப்பெற பல வழிகள் உள்ளன.

அரசியலமைப்பு சீர்திருத்தம் குறித்து சனாதிபதி, ஐ.தே.கவுடன் பேச் நடத்துகின்றாரா என்பது குறி[illegible]து உண்மையில் எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் சனாதிபதி ஆட்சி முறையை மாற்றியமைக்க சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது.

இனப்பிரச்சிக்கான அரசியல் தீர்வாக சமஷ்டி முறையிலான அதிகாரப் பரவலாக்கல் முறைக்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பத்தில் ஒத்துழைப்பு வழங்காவிட்டாலும் பொதுமக்களின் பெரும்பான்மை தீர்ப்பிற்கு அவர்கள் செவிசாய்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்றும் கூறியுள்ளார்.

# பொது இடங்கள், வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள விளம்பரங்கள்,பதாகைகளை அகற்றப் பணிப்பு

பொது இடங்கள், தெருக்கள், போக்குவரத்துச்சாலைகளில் எழுதப்பட்டுள்ள விளம்பரங்கள்,மற்றும் பதாகைகள்யாவும் உடனடியாக அகற்றுவதற்கு சிறிலங்காவின் போக்குவரத்துப்பகுதி தீர்மானம் எடுத்துள்ளது.

பிரதான போக்குவரத்து மார்க்கங்களில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட விளம்பரப் பலகைகள் இருப்பதாக சிறிலங்காவின் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு கூறியுள்ளதுடன், விளம்பரங்களுக்கு அனுமதி வழங்கிய காலக்கெடு முடிந்த சில விளம்பரங்களும் அகற்றப்படாத நிலையில் உள்ளதெனத் தெரிவித்துள்ளனர்.

ஆகவே சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு விளம்பரங்களை அகற்றுவதற்குபோக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு இன்று வரை கால அவகாசம் வழங்கியுள்ளது.


## 31 ஆம் நாள் நினைவுகள்

15.03.2005

பூமிமகளாய் 23 - 11 - 1939



தெய்வமகளாய் 13 - 02 - 2005

## திருமதி தெய்வநாயகி ராஜரட்ணம்

எங்கள் அன்னையின் பிரிவு வேளை நேரடியாகவும், தொலைபேசி, தந்தி, அஞ்சல் மூலமாகவும் துயரங்களைப் பகிர்ந்து கொண்டும், உபசரித்தும், உதவிகள் புரிந்தும், மலர் வளையங்கள், மாலைகள் சமர்ப்பித்தும், எந்த வகையிலேனும் எமக்கு ஆதரவாகவிருந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

அம்மாவின் நினைவாக 19.03.2005 சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் கொழும்பு பம்பலப்பிட்டி அரச தொடர்மாடி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும் நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நெஞ்சில் சுமக்கும் நினைவுகளுடன்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சிவசுந்தரம் வீதி,
பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி. தொ.பே.இல. 011-2714181, 0777630171 (5784)

## மலர்ந்திடும் நினைவுகளில்...



### லெப்.அன்சார்
(சீவரத்தினம் சிவரூபன்)

முத்தாக:– 1970. 05. 09
வீர. விதையாக:– 1989. 07. 29
சம்பவம் :– முள்ளியவளை தண்ணீரூற்று இந்திய இராணுவ முகாம் தகர்ப்பின் போது



### கப்டன் புலவர்
(யோகசாமி செந்தூரன்)

முத்தாக:– 1973. 05. 05
வீர. வித்தாக:– 1991. 03. 20
சம்பவம் :– சிலாவத்துறை முகாம் தகர்ப்பின் போது

ஒரு கொடியில் மலர்ந்த இரு மலர்களே
மலர்ந்து கனியாக முன்பே- காலத்தின்
தேவையையிட்டு மலர்கள் உதிர்ந்தனவோ
உங்களின் நினைவை எண்ணி அழுதிட ...
இங்கே
இரண்டு விழிகள் தாங்காது.
நகக் கண்கள் அதுவும் அழுதால் - அது
கூடப் போதாது எம் இதயங்கள்
- உள்ளவரை.



### லெப்.அன்சார் (தாமோதரன்)
(சாள்ஸ் அன்ரனி படையணி)
(சீவரத்தினம் சிறிகாந்)

முத்தாக:– 1974. 01. 09
வீர. வித்தாக:– 1993. 08. 13
சம்பவம் :– மாதகல் பண்டத்தரிப்பு முகாம் தகர்ப்பின் போது

தகவல்:-
திருமதி சீ சரோஜினி குடும்பத்தினர்
161 1/4 கண்டி வீதி, பரந்தன்.

(5792)

## இரத்தினம் (இரட்னாஸ்) உதிரிகள் வாணிபம்

நீதிமன்றம் முன்பாக இயங்கிய எமது நிறுவனம் மக்கள் வங்கியிலிருந்து யாழ்.நோக்கி 200 மீ துாரத்தில் கமலா ஸ்ரூடியோவிற்கு அருகாமையில் இயங்கிவருகின்றது என் பதை வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இரத்தினம்(இரட்னாஸ்)
A9 வீதி, கிளிநொச்சி.

(5790)


# சிபுசோரன் இராஜினாமா

ஜார்க்கண்ட் மாநில முதல்வராகப் பதவியேற்ற சிபுசோரன் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.கடந்த மாதம் வெளிவந்த ஜார்க்கண் மாநில சட்டசபைத் தேர்தலின் முடிவின்படி எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையை வெளிக்காட்ட முடியாத நிலையில் ஆளுநர் சிபுசோரனை ஆட்சி அமைக்க அழைக்கவே பிரச்சினை உருவானது. பாரதீய ஜனதா கூட்டணியினர் தம்மிடம் 41 உறுப்பினர்கள் உள்ளதாக சனாதிபதி[illegible] முன் அணிவகுப்பு நடத்தினர்.

அதனையடுத்து குடியரசுத் தலைவரின் உத்தரவின்பேரிலும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்பேரிலும் சிபுசோரன் மார்ச் 11 ஆம் திகதி தனது பெரும் பான்மையை நிரூபிக்க வேண்டிய கட்டத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு முன்னதாகவே சிபுசோரன் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.


சிபுசோரனின் இராஜினாமாவையடுத்து புதிய முதல்வர் யார் எனும் கேள்விக்கு ஓரிரு நாட்களில் விடை கிடைக்குமென உயர் அரசியல்வாதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# மீண்டும் பேரலை

தமிழ்நாடு குமரி மாவட்டத்தின் கரையோரப்பகுதிகளில் கடலலை எழுந்து சுமார் அரைக் கிலோமீற்றர் தூரம் ஊருக்குள் வந்தாக அறிய வருகின்றது.


நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, கரையோரமாக நின்று வேலை செய்து கொண்டிருந்தவர்கள் வழமையை விட கடல் அதிகளவில் அலையடிப்பதை அவதானித்துள்ளனர். அதன் பின் காலை ஒன்பது மணியளவில் கடல் அலை சுமார் 25 அடி உயரத்திற்கு எழுந்து ஊருக்குள் புகுந்துள்ளது. அதையடுத்து அப் பகுதியில் வேலை செய்து கொண்டிருந்தவர்களும் குடியிருப்புக்களில் இருந்தவர்களும் கரையை விட்டு ஓடித்தப்பியுள்ளனர். இக்கடல் பேரலையால் கரையில் இருந்த சில வள்ளங்கள் அடித்துச் செல்லப் பட்டதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

## நினைவு கூருகின்றோம்



அமரர்
**திரு.பொன்னுத்துரை சிறிதரன்**
(மாணவன் உப மருந்தாளர் பயிற்சிநெறி)

*13. 03. 2004 அன்று கிளிநொச்சியில் எதிர்பாராத விபத்தில் சாவடைந்த நாட்டுப்பற்றாளர்களான*



அமரர்
**திரு.ஈஸ்வரச்சந்திரன்**
(ஆசிரியர் உப மருந்தாளர் பயிற்சிநெறி)


*ஆகிய இருவரையும் அன்னார்களின் முதலாமாண்டு நிறைவு நாளில் நினைவு கூருகின்றோம்.*

ஆசிரியர்கள், மாணவர்கள்,
உபமருந்தாளர் பயிற்சிநெறி
நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்

(சி.5793)

## நீங்காத நினைவின் முதலாம் ஆண்டு

மண்மகிழ
1970 - 01 - 05



விண்நெகிழ
2004 - 03 - 13

நாட்டுப்பற்றாளர்
**பொன்னுத்துரை ஸ்ரீதரன்**
[தமிழீழ மருந்துக் களஞ்சியம்)
பணியாளர்

*நிலத்தைவிட்டு நெடுந்தூரம்*
*நீ சென்று ஓராண்டு ஆனதுவே.*
*விடுதலையின் வீரத்திற்கு உன்பணி சிறக்கயிலே*
*மருத்துவப்பணி சிறக்க பல்லாண்டு பணிபுரிந்து*
*விடுதலைக்கு உரமிட்டாய்*
*உன்னுடன் கூடியோரை சிரித்துச்சிரித்துப் பேசி*
*சிந்திக்க வைத்தீரே*
*ஆயிரம் உறவுகள் இருந்தென்ன*
*அப்பா என்றழைக்க ஓர் உறவு இல்லையே*
*உன் மழலைக்கு.*
*வாழ்வளிக்கும் சூரியன்போல்*
*உங்கள் குடும்பத்தாரை மேலிருந்து போசியுங்கள்*

இவருடன் சாவடைந்த நாட்டுப்பற்றாளர் ஈஸ்வரச்சந்திரன் (ஆங்கில ஆசிரியர்)அவர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

பணிப்பாளர்,
போராளிகள்,பணியாளர்கள்,
தமிழீழ மருந்துக் களஞ்சியம்

(5496)

## கிளிநொச்சி மாவட்ட உலக உணவுத்திட்ட களஞ்சியத்தில் சேவையாற்றுவதற்கான ஆட்சேர்ப்பு

### பதவி வெற்றிடங்கள்

**01. களஞ்சியக்காப்பாளர்**

விண்ணப்பதாரி க.பொ.த(சா.த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் தமிழ் கணிதம் உட்பட நான்கு திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருப்பதுடன், க.பொ.த (உ.த)பரீட்சையில் கணக்கியல் உட்பட அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வயது:-18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர் ஐந்து வருட சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.வெற்றிடம்-01

**02 உதவிக் களஞ்சியக் காப்பாளர்**

இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி ஒன்றிற்கான தகைமைகள் பெற்றிருத்தல் வேண்டும. வெற்றிடம்-02

**03. கணக்கு எழுதுநர்**

விண்ணப்பதாரர் க.பொ.த(ச.த)பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களுக்குக் குறையாமல் தமிழ் கணிதம் உட்பட நான்கு திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தலும் வேண்டும். ஒருவருட கால சேவை அனுபவம் இருத்தல் வேண்டும். வெற்றிடம்-04

**04. களஞ்சிய தொழிலாளி**

விண்ணப்பதாரர் எட்டாம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும். திடகாத்திரமான உடல் நலம் உடையவராக இருத்தல்வேண்டும்.வெற்றிடம்-01

**விண்ணப்பங்கள் யாவும் 19.03.2005 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரியினால் தயாரிக்கப்பட்டு பூர்த்திசெய்து அனுப்புதல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். பதவிகள் யாவும் தற்காலிகமானதாகும்.**

**சம்பளம்:- அரசசம்பள அளவுத்திட்டங்களின் பிரகாரம் வழங்கப்படும்**

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

சி.11390)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



நாட்டுப்பற்றாளர்
**திரு.ஈஸ்வரச்சந்திரன்**
(ஆங்கில ஆசிரியர்)

**தோற்றம் 22.07.1935**
**மறைவு 13.03.2004**

புன் சிரிப்பால் வலைவிரித்து
நற்புறவில் தோழனாய் நித்தம்
எமைச் சீரமைத்து
மொழி சொல்லும் மூச்சாய்
வாழ்ந்த எம் உறவை
இழந்து ஆண்டொன்று
போனபோதும்
நீர்வாழ்வீர் பல்லாண்டு எம்முடன்

**உங்கள் நினைவுகளைச் சுமந்தபடி நாங்கள்**

(5794) தகவல்:-அ.ரஞ்சன் குடும்பத்தினர்



மொகாலி டெஸ்ட் போட்டி


# அக்மல், அப்துல் ரசாக் அபாரம்

# இந்தியாவின் வெற்றிக் கனவு கலைந்தது


இந்திய- பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் மொகாலியில் நடைபெற்று வந்த முதலாவது டெஸ்ட் போட்டி இரு அணிகளுக்கும் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

பிரகாசமான வெற்றி வாய்ப்புடன் இறுதி நாளான நேற்று களத் தடுப்பை மேற்கொண்ட இந்திய அணிக்கு அப்துல் ரசாக் அக்மல் இணையை பிரிக்க முடியாமல் போனமை அதன் வெற்றிக் கனவைக் கலைத்தது.

போட்டியில் நான்காவது நாள் ஆட்ட முடிவில் ஆறு விக்கெட் இழப்பிற்கு 257 ஓட்டங்களுடன் ஐந்தாவது நாள் ஆட்டத்தை தொடர்ந்த பாகிஸ்தான் மிகுதி நான்கு விக்கெட்டுக்களையும் விரைவாக இழந்து விடுமென அனைவரும் எதிர்பார்த்திருக்க இருவரும் நிதானமாக ஆடி ஓட்டங்களை குவித்தனர்.




இந்திய பந்து வீச்சாளர்கள் இருவரையும் ஆட்டமிழக்கச் செய்வதற்காக திணறினர். பந்து வீச்சாளர்களை மாற்றியும் பயனில்லாமல் போனது. இதனால் பாகிஸ்தான் ஓட்டம் நிதானமாக உயர்ந்தது.



கம்ரான் அக்மல் மிகவும் சிறப்பாக விளையாட ரசாக் நிதானமாக ஆடினார். இதனால் மதிய உணவு இடைவேளை வரை இவர்களை பிரிக்க முடியவில்லை. இது பாகிஸ்தானின் தோல்வியை தடுத்து நிறுத்தியது. கம்ரான்அக்மல் டெஸ்ட் போட்டியில் முதல் சதத்தைப் பெற்றார். அவர் 16 நான்கு ஓட்டம் அடங்கலாக 154 பந்துகளில் 109 ஓட்டங்களைப் பெற்றார். ரசாக் 260 பந்துகளை எதிர்கொண்டு 71 ஓட்டங்களைப் பெற்றார். இறுதியில் 9 விக்கெட்டுக்களை இழந்து 496 ஓட்டங்களைப் பெற்ற பாகிஸ்தான் ஆட்டத்தை நிறுத்தி 287 என்ற வெற்றி இலக்கை இந்தியாவுக்கு நிர்ணயித்தது. வெற்றி இலக்கு நோக்கி ஆடிய இந்தியா 17 ஓவர்கள் துடுப்பாடி ஒரு விக்கெட்டை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. போட்டியின் நாயகனாக கம்ரான் அக்மல் தெரிவானார்.

## தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் சிம்பாப்வே அணியில் முன்னேற்றம்



தென்னாபிரிக்க-சிம்பாப்வே அணிகளுக்கிடையில் செஞ்சூரியன் பார்க்கில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சிம்பாப்வே முன்னேற்றம் கண்டுள்ளது.

முதல் இனிங்சில் மீண்டும் அணியில் இணைந்த ஹீத் ஸ்ரிக், பிளிங்னட்டின் அபார ஓட்டத்தால் 269 ஓட்டங்களைக் குவித்த சிம்பாப்வே நேற்றைய இரண்டாம் நாளில் 54.3 ஓவர்கள் நிறைவில் தென்னாபிரிக்காவை 230 ஓட்டங்களுக்கு முக்கிய ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தது.

இதில் எவரும் அரைச் சதத்தை எட்டாது ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது. இதில் வில்லியஸ் 47, சிமித் 41, கிப்ஸ் 47 ஓட்டங்களுடன் முறையே ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.




## பசிபிக் லைப் ஓபன் டென்னிஸ் முன்னேறுகிறார் கிளிஜர்ஸ்


பசிபிக் லைப் ஓபன் டென்னிஸ் தொடரில் மூன்றாவது சுற்றுக்கு பெல்ஜிய வீராங்கனை கிம்கிளி ஜர்ஸ் தகுதி பெற்றுள்ளார்.

அவர் ஷினபு அசகோவை 6-3, 6-3 என்ற செட் கணக்கில் வென்றுள்ளார். நான்கு மாதமாக மணிக்கட்டில் காயம் காரணமாக கிளிஜர்ஸ் ஓய்வில் இருந்தார். தற்போது போட்டிகளில் பங்கேற்று வருகிறார்.

இப்போட்டியில் அமலி மௌரிஸ்மோ பிரான்சின் ததியானோ கார்பினை 6-2, 6-1 என்ற கணக்கிலும் அமெரிக்க ஓபன் சம்பியன் ஸ்வட்லணாகுஸ்னட்ஸ்சோவா செக்குடியரசின் பர்னரோவை 6-3, 6-2 என்ற கணக்கிலும் வென்று முன்னேறியுள்ளனர்.

ஓய்வில் இருந்த கிம் கிளிஜர்ஸ் 133 ஆவது இடத்துக்கு பின் தள்ளப்பட்டார்.

## கில்கிறிஸ்ட், கடிச் அபாரத் துடுப்பாட்டம் நெருக்கடியில் இருந்து மீண்டது அவுஸ்.





நியூசிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் கிறிஸ்செச்சில் நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வி அற்ற முடிவை கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

போட்டியின் மூன்றாம் நாளான நேற்று முதல் இனிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 432 ஓட்டங்களைப் பெறறது.

141 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்கள் என்ற நிலையில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த அவுஸ்திரேலியா ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே பொண்டிங், கிளார்க், கிளெஸ்பி ஆகியோரின் விக்கெட்டை இழந்தது.



இதனால், அவுஸ். ஆறு விக்கெட் இழப்பிற்கு 201 ஓட்டம் என்ற பரிதாப நிலையில் இருந்தது. ஏழாவது விக்கெட்டுக்காக இணைந்த கடிச், கில்கிறிஸ்ட் ஆகியோர் சதமடித்து அணியை இக்கட்டில் இருந்து மீட்டனர்.

கில்கிறிஸ்ட் 121 ஓட்டங்களையும், கடிச் 118 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் விக்டோரி ஐந்து விக்கெட்டுக்களையும், பிறங்லீன் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் இரண்டாவது இனிங்சிற்காக துடுப்பெடுத்தாடும் நியூசிலாந்து விக்கெட் இழப்பின்றி ஒன்பது ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நியூசிலாந்து முதல் இனிங்ஸ் 433 ஓட்டங்கள்.

இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

## கிரிக்கெட் துளிகள்....

மொகாலி டெஸ்ட் போட்டியில் பயன்படுத்திய பந்து மெதுவான தன்மையுடன் இருப்பதாக பாகிஸ்தான் வீரர்கள் சிலர் கூறியுள்ளனர். இருப்பினும் இது குறித்து புகார் எதுவும் தெரிவிக்கவில்லை என்று அந்த அணி முகாமையாளர் சலிம் அல்தாப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணி இறுதி நாளில் தொடர்ந்து சிறப்பாக ஆடி இந்திய அணிக்கு 200 ஓட்ட இலக்கு நிர்ணயிக்கும் என்று ஆறு விக்கெட்டுக்களை கைப்பற்றிய சுழற்பந்து வீச்சாளர் டானிஷ் கனேரியா கூறியுள்ளார். 24 ஆவது டெஸ்டில் ஆடும் கனேரியா ஒன்பதாவது முறையாக ஐந்து விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். கனேரியா பாகிஸ்தான் அணியில் இடம் பெற்ற இரண்டாவது இந்து வீரர் ஆவார்.

யூசுப் யுகானா நேற்று முன்தினம் வித்தியாசமான முறையில் துரதிஷ்டவசமாக ஆட்டம் இழந்தார். கும்பிளேயின் பந்தை அவர் தடுத்து ஆட முயற்சித்தபோது பந்து துடுப்பில் பட்டு உருண்டு வந்து 'ஸ்டம்பை' பதம் பார்த்து அவரை ஆட்டம் இழக்க வைத்தது. அணித்தலைவர் இன்சமாம் முதல் இனிங்ஸ் போல் இரண்டாவது இனிங்சில் கும்பிளே பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார்.

# வெகுசிறப்பாக நடைபெற்ற சிறுவர் விளையாட்டு விழா





கிளிநொச்சி சந்திரன் சர்வதேச பாடசாலையின் இரண்டாம் ஆண்டு விளையாட்டு விழா நேற்று மாலை கிளி.மத்திய விளையாட்டு மைதானத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றுள்ளது.

போட்டியின் ஆரம்ப நிகழ்வாக கிளி. மத்தியகல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் சிறப்பு விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு சிறப்பு விருந்தினருக்கு மலர்மாலைகளும் அணிவிக்கப்பெற்று மங்கள விளக்கேற்றும் வைபவம் நடைபெற்றது. மங்கள விளக்கினை தமிழர்புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப்பணிப்பாளர் கே.பி.றெஜி, அரசசார்பற்ற இணையங்களின் தலைவர் க.கணேசபிள்ளை, தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆலோசகர் திருமதி.ச.மார்டூர்க் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து தமிழீழத் தேசியக்கொடியினை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

அடுத்து தமிழர்புனர்வாழ்வுக்கழககொடியினை தமிழர் புனர்வாழ்வுக்கழகப் துணைப் பணிப்பாளர் றீகன் ஏற்றிவைக்க, சந்திரன் சர்வதேச பாடசாலைக்கொடியினை அதன் இணைப்பாளர் திருமதி.பா.திலகா அவர்கள் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து அணிவகுப்பு மரியாதை நடைபெற்றது. இதனை டாக்டர் எதிர்வீரசிங்கம் அவர்கள் ஏற்றுக்கொள்ள, ஒலிம்பிக்தீபம் ஏற்றும் வைபவம் இடம் பெற்றது. ஒலிம்பிக் தீபத்தினை விளையாட்டுத்துறை செயலாளர் அன்ரன் அன்பழகன் ஏற்றிவைத்தார்.

அடுத்து மாணவர்களின் சத்தியப் பிரமாணத்தை சந்திரன் சர்வதேச பாடசாலையின் மாணவன் செல்வன்.தர்ஷிகன் வழங்கினார்.

தொடர்ந்து தலைமையுரையினை சந்திரன் சர்வதேச பாடசாலையின் பணிப்பாளர் இராஜகோபால் அவர்கள் நிகழ்த்தினார். ஆசியுரையினை அரசசார்பற்ற இணையத்தலைவர் க.கணேசபிள்ளை வழங்கிப் போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.

போட்டிகள் விறுவிறுப்பாக நடைபெற்று இடைவேளை நிகழ்வாக இசையும்,அசைவும் நிகழ்வு நடைபெற்றது. அடுத்து பெற்றோர்களுக்கான முட்டை ஏந்துதல் நிகழ்வும், நலன்விரும்பிகள் நிகழ்வும், பாடசாலை ஆசிரியர்கள் நிகழ்வும் நடைபெற்றன.

இறுதியாக பரிசில்கள் வழங்கும் வைபவம் நடைபெற்றன. இப்பரிசில்களை டாக்டர் எதிர்வீரசிங்கம் வழங்கினார். அத்தோடு சான்றிதழ்களை அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி. பாப்பா, நிர்வாக சேவையைச் சேர்ந்த இளஞ்சேரன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (கு)

## கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் பொதுக்கூட்டம் மூன்று மாதம் ஒத்திவைப்பு

பல்வேறு எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் கூடிய யாழ்.மாவட்ட கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பொதுக்கூட்டம் மேலும் மூன்று மாத காலங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயற்பாடு சம்பந்தமாக பல்வேறு வாதப் பிரதிவாதங்களுக்கிடையில் தலைவர் கப்ரின் என்.சோமசுந்தரம் தலைமையில் கிரிக்கெட் அக்கடமியில் இடம்பெற்றது. அங்கத்துவக் கழகங்களின் வேண்டுதலின் அடிப்படையில் கிரிக்கெட் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டும் மேலும் மூன்று மாதங்களுக்கு தற்போதைய செயற்குழுவை இயங்க விடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் தமிழீழ விளையாட்டுத்துறையைச் சேர்ந்த சி.பத்மநாதன் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் சி.மாதுளன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (41)

## மகளிர் தினத்தையொட்டி வவுனியாவில் விளையாட்டுப் போட்டிகளும், பரிசளிப்பும்

உலக மகளிர் தினத்தையொட்டி வவுனியா பிரதேச செயலகம் அதன் எல்லைக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களின் மகளிர் பிரிவு அணிகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகளை நடாத்தியுள்ளது.


வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய கழகங்களின் விபரம் வருமாறு, கரப்பந்தாட்டம் :- 1ஆம் இடம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம், 2ஆம் இடம் கலைமகள் விளையாட்டுக்கழகம், வலைப்பந்தாட்டம் :- 1ஆம் இடம் யங்ஸ்ரார் வி.க., 2ஆம் இடம் பமிலியன் வி.க., கபடி :- 1ஆம் இடம் யங்ஸ்ராா வி.க. 2ஆம் இடம் றொக்கற் வி.க. கிளித்தட்டு:- 1ஆம் இடம் யுரேன வி.க., 2ஆம் இடம் றொக்கற் வி.க.

மாதர் சங்கங்களுக்கிடையேயான வலைப்பந்தாட்டப் போட்டியில் 1ஆம் இடத்தை பூவரசன்குளம் மாதர் சங்கம் பெற்றுக் கொண்டது. இதே போன்று சாஸ்திரி கூழாங்குளம் மாதர் சங்கங்களுக்கிடையே நடாத்தப்பட்ட 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் 1ஆம் இடத்தை செல்வி. ல. ஜெயராணி, 2ஆம் இடத்தை செல்வி. ஏ. அயர்லா, 3ஆம் இடத்தை செல்வி இ. அருள்தலா ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

பாடசாலை மாணவிகளுக்கிடையேயான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் 1ஆம் இடம் :- க. கலைவாணி, 2ஆம் இடம் சி. உதயா, 3ஆம் இடம் வி. சேந்தினி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

மகளிர்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் 1ஆம் இடம் சோ. சயந்தினி, 2ஆம் இடம் சு. சத்தியலோஜினி, 3ஆம் இடம் சி. திஷாந்தினி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

கயிறு இழுத்தல் போட்டியில் 1ஆம் இடத்தை யங்ஸ்ரார் வி.கழகமும், 2ஆம் இடத்தை ஈச்சங்குளம் மாதர் சங்கமும் பெற்றுக் கொண்டன. (10)



### சிந்தனைக்கு

உண்மையில் எமது மக்களின் பாரிய உயிரிழப்பிற்பிற்கும் அவர்களின் உடைமை நாசத்திற்கும், சிங்கள ஆளும் வர்க்கத்தின் இன வெறி பிடித்த தலைவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 13-03-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com

## பொறுக்கவில்லை!

கிழக்கில் மேலும் ஒரு வழியில் பதற்றத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகளில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் முனைப்பாக இறங்கியுள்ளனர். இதன் ஓர் அங்கமே மட்டக்களப்பு கல்குடாத் தொகுதியில் கிரிமிச்சை என்னும் இடத்தில் ஆட்டோ சாரதியான முஸ்லிம் இளைஞர் படுகொலை செய்யப்பட்ட சம்பவமாகும்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாக இருப்பினும் இராணுவத்தினரதும், தேச விரோதக்கும்பல்களினதும் நடமாட்டம் உள்ள இப் பிரதேசத்தில் முஸ்லிம் இளைஞரைப் படுகொலை செய்ததன் மூலம், விடுதலைப் புலிகளே இப்படுகொலைக்குக் காரணம் எனக் குற்றஞ்சாட்டுவதன் மூலம் பதற்றத்தை அதிகரிப்பதே அரச தரப்பின் நோக்கமாகும்.

யுத்த காலத்தில் தமிழ்மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் இடை யில் நிலவிய முரண்பாடு மற்றும் அவநம்பிக்கைகள் என்பனவற்றைப் போக்குவதற்கெனச் சமாதான காலத்தில் விடுதலைப் புலிகளால் பெரும் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் விடுதலைப்புலிகளால் கணிசமான முன்னேற்றமும் காணப்பட்டிருந்தது.

அண்மையில் மட்டு- அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து கிழக்கிற்குச் சென்றிருந்த அரசியல்துறைப் பொறுப்பாளர்.சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் பல முஸ்லிம் பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியமையும் கௌசல்யன் அவர்களின் மரணம் குறித்துப் பல முஸ்லிம் மக்கள் அனுதாபம் தெரிவித்ததில் இருந்துமே இவ் உறவில் ஏற்பட்ட முன்னேற்றம் வெளிப்பட்டிருந்தது.

அதுமட்டுமன்றி சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட பேரழிவின் போது பரஸ்பரம் இரு தரப்பினரும் உதவிகள் புரிந்து தமது நட்புறவை வெளிக்காட்டியும் இருந்தனர். அதாவது தமிழ்-முஸ்லிம் மக்களிடையில் யுத்த காலத்திற்கு முற்பட்ட அந்நியோன்னியமும், நட்பும் மீண்டும் வளர்ச்சி காணத் தொடங்கியது.

ஆனால் சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கு தமிழ்-முஸ்லிம் மக்களிடையிலான நல்லுறவு புரிந்துணர்வு என்பன ஏற்புடையதாக இருக்கவில்லை. கிழக்கு மாகாணம் எப்பொழுதும் கொதிநிலையில் இருக்கவேண்டுமென்றே சிங்கள ஆட்சியாளர்களும், அதன் ஆயுதப்படையினரும் விரும்பினர். தமிழ்-முஸ்லிம் மக்களிற்கிடையிலான உறவு நிலையில் முன்னேற்றம் ஏற்படுவதை அவர்கள் விரும்புவதாக் இல்லை.

இதன் வெளிப்பாடே முஸ்லிம் இளைஞரின் படுகொலையாகும். இது ஒரு சதி நடவடிக்கை என்பது இலகுவில் எவராலுமே புரிந்து கொள்ளக் கூடியதொன்றே. ஒருபுறத்தில் கொல்லப்பட்ட இவ் இளைஞருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் எத்தகைய முரண்பாடும் இருந்ததாக இல்லை. அடுத்ததாக விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டுப்பகுதியில் வைத்து ஒரு முஸ்லிம் இளைஞரைப் படுகொலை செய்யும் அளவிற்கு அரசியலில் அடிமுட்டாள்களும் இல்லை.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இல்லாது விடினும் இதை ஒத்த சம்பவமே பொலநறுவை மாவட்டத்தில் அண்மையில் ஆறு பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவமாகும். அதாவது படுகொலைகள் மூலம் இனங்களுக்கு இடையில் பதற்றத்தையும், அமைதியின்மையும் தோற்றுவித்தலாகும். இத்தகைய வழிமுறை தற்பொழுதுதான் மேற்கொள்ளப்படுகின்றது என்பதல்ல. கடந்த காலத்திலும் இதனையே சிறிலங்கா அரசு செய்தது. இதைப் புரிந்துகொண்டுள்ள முஸ்லிம் தலைமைகள் கூட தமது அரசியல் அபிலாசைகளுக்காகக் கண்டும் காணாமலும் இருந்து வந்துள்ளன.

இப்படுகொலையின் பின்னணியில் சிறிலங்கா ஆயுதப் படையினரும், அவர்களுடன் இணைந்து செயற்படும் தமிழ்இனத் தேச விரோதக் கும்பல்களும் உள்ளன என்பதினைப் புரிந்து கொள்ளப் பெரிதாக சாணக்கியம் ஒன்றும் தேவையானதாக இருக்க மாட்டாது. ஆனால், இத்தகைய சம்பவங்களானது, அமைதியின்மையைத் தோற்றிவிக்கும் என்பது நிராகரிக்கப்படமுடியாததாகவே இருக்கும். ஏனெனில் மக்களின் உணர்ச்சிகளை இலகுவில் இனவாதிகளினால் கிளறி விடமுடியும்.

சிங்கள ஆட்சியாளர்களும், ஆயுதப்படைத்தரப்பும் இம் முயற்சியில் முனைப்புக்காட்டுவதானது ஒன்று நாட்டில் மீண்டும் யுத்தத்திற்கான சூழ்நிலை நெருங்கிவருகின்றது அன்றி மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு இடையூறுகளைத் தோற்றுவித்தல் என்பதன் அடிப்படையிலேயே ஆகும்.

நேரடியாகக் கூறுவதானால் யுத்த நிறுத்தத்திற்கும், சமாதான முயற்சிகளுக்கும் ஊறுவிளைவிக்கும் செயற்பாடாகவே இது கொள்ளத்தக்கது. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தவிர்க்க முடியாத நிலையில் தற்பொழுது மீண்டும் சமாதானப்பேச்சுக்கள் பற்றிப் பேச ஆரம்பித்துள்ளார். ஆனால் இதில் முன்னேற்றம் ஏதும் ஏற்பட்டுவிடாதவாறு பார்த்துக்கொள்வதிலும் அவர் கரிசனையாகவுள்ளார். இதன் காரணமாகவே கிழக்கில் இத்தகைய பதற்றத்தைத் தோற்றிவிக்கமுனைகின்றார். இம்மதிப்பீடு தவறாக மாட்டாது. ஏனெனில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அவரால் கிழக்கில் ஆயுதப்படையினரின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துதல் ஒன்றும் கடினமானவையல்ல.

## ஆழிப்பேரலை நிவாரணம் வழங்கக் கோரி திருமலையில் பிக்குகள் உண்ணாவிரதம்

திருகோணமலை மகாதிவுல் வேவ பெரியவிளாங்குளம் ஸ்ரீபப்பதார ரஜமகா விகாரையைச் சேர்ந்த பிக்குகள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

பிரதம பிக்கு ஹந்துன்கமுவே நந்தரத்ன தேரரும் மேலும் ஐந்து தேரர்களும் நேற்றுக் காலை முதல் இந்த உண்ணாவிரத போராட்டத்தை நடத்துகின்றனர்.

அரசாங்கம் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்க வேண்டும். அரசாங்க களஞ்சியங்களில் நிவாரணப் பொருட்கள் தேக்கி வைக்கப்படாமல் அவை இனமத பேதம் இன்றி பகிரப்படவேண்டும் எனக் கோரியே இந்த உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் தாம் போராட்டத்தை விலக்கிக் கொள்ளவேண்டுமானால் அரச அதிபர் தமக்கு தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்ற உறுதி அளிக்கவேண்டும் எனவும் பிரதம பிக்கு நந்தரத்ன தெரிவித்துள்ளார்.

இவரை திருகோணமலை உதவி அரசாங்க அதிபர் நேற்று சந்தித்துள்ளார். (32)

## தமிழர்களை பதிவுசெய்யும் நடைமுறை மீண்டும் கொழும்பில்?

### மனோ கணேசன் கேள்வி

கொழும்பில் மீண்டும் பொலிசாரால் தமிழ் மக்களின் விபரங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறதா? என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவிடம் மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

கொழும்பின் கிராண்ட்பாஸ்,கொட்டாஞ்சேனை வெள்ளவத்தை போன்ற பொலிஸ் நிலையங்களிலிருந்து மக்களை பதிவு செய்யும் வகையிலான விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளமையை அடுத்தே இது தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை பொலிசார் இவ்வாறான படிவங்களை விநியோகித்ததால் அதனை நிரப்பிக்கொடுக்க வேண்டாம் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கொழும்பு வாழ் தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்ணான்டோவை தொடர்பு கொண்ட போது அவ்வாறான ஏற்பாடுகள் குறித்து தாம் அறிந்திருக்கவில்லையென தெரிவித்தார். (32)

## ஆபத்தான பொருட்களைக் கண்டறிய கொழும்புத்துறைமுகத்தில் நவீன கருவி

### -அமெரிக்காவின் உதவியுடன் பொருத்தப்படும்

சிறிலங்காவிற்கு உள்ளே கொண்டு வரப்படும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான பொருட்களை கண்டு பிடிப்பதற்கு அமெரிக்க உதவியுடன் கொழும்புத் துறைமுகத்தில் நவீன ரக உபகரணத் தொகுதியொன்று பொருத்தப்பட இருக்கின்றது.

இந்தத் தகவலை இலங்கை துறைமுக அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் கிருசாந்த தெகரகொட வெளியிட்டுள்ளார். அமெரிக்க உதவியுடன் இந்தக் கருவிக் பொருத்தப்பட இருப்பதையடுத்து இது தொடர்பான பயிற்சிக்காக துறைமுகப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் தற்போது அங்கு சென்றுள்ளதாகவும் இதுபற்றி அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆழிப்பேரலை நிவாரண உதவியாக இலங்கைக்கு 950 கோடி ரூபாய்

ஆழிப்பேரலை நிவாரண உதவியாக இதுவரை இலங்கைக்கு மத்திய வங்கி ஊடாக 950 கோடி ரூபாய் கிடைத்துள்ளதாக அந்த வங்கி தெரிவித்துள்ளது.

அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களுக்கும் ஏனையோருக்கும் மத்திய வங்கி ஊடாக இந்தத் தொகை வெளிநாடுகளிலிருந்து கிடைத்துள்ளது. இதில் அரசாங்க வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய வங்கிகளுக்கு கிடைத்துள்ள 130 கோடி ரூபாவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வெலிக்கந்தப் பகுதிக் கிராமத்தில் பாதுகாப்புக்கோரி மக்கள் போராட்டம்

பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்தைப் பிரதேசத்திலுள்ள கொலக்கன்னாவெளிக் கிராம மக்கள் தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கோரி நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இக்கிராமத்தில் மூன்று வீடுகளில் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதலில் நான்கு முஸ்லிம்கள், ஒரு தமிழர் ஒரு சிங்களவர் என ஆறு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சுட்டுக் கொல்லபட்ட சிங்களவரான சாந்தேவிஜய சூரியவின் ஏழாம் நாள் மதச் சடங்கு அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதன் பின்பு நூற்றுக்கு மேற்பட்ட கிராமவாசிகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவம் இடம் பெற்ற இடத்திலிருந்து சுமார் 50 மீற்றர் தொலைவில் பொலிஸ் காவல் நிலையமொன்று இருந்த போதிலும் மக்களைப் பாதுகாக்க பொலிசார் தவறிவிட்டதாகவும் கிராமவாசிகள் குற்றஞ் சுமத்துகின்றார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த இராணுவ முகாம் அமைக்கப்பட வேண்டுமென்றும் ஏற்கனவே வழங் கப்பட்டு மீளப்பெறப்பட்ட தற் காப்புக்கான துப்பாக்கிகளை திருப்பித்தர வேண்டுமென்றும் கிராமவாசிகளினால் ஆர்ப்பாட்டத்தின்போது கோசங்கள் எழுப்பப்பட்டன.

## காயமடைந்த புளொட் உறுப்பினர் கொழும்பிற்கு அனுப்பிவைப்பு

மட்டக்களப்பு புளொட் அமைப்பின் மாவட்ட அலுவலகம் மீது நேற்று முன்தினம் மேற் கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் காயமடைந்த மூவரில் இருவர் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

காந்தன் எனப்படும் தம்பிராசா பாலசுந்தரம் (வயது- 32), வெள்ளை எனப்படும் நாகமணி சிவராசா (வயது -45) ஆகியோரே இவ்வாறு மாற்றப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு வைத்தியசாலையில் அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில் இவர்கள் சிகிச்சை பெற்றுவந்த போதிலும் மேலதிக சிகிச்சைக்காகவே கொழும்பிற்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## 20 பேர் கைது

கண்டியில் கடந்த வியாழன் இரவு இடம்பெற்ற திடீர் சோதனையின் போது 20 பேர் வரை கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் தொடர்புடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரமுகர்களின் இரவு எனப் பெயரிடப்பட்ட விசேட நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டார்கள் . நாட்டில் இடம்பெறும் பல்வேறு குற்றச் செயல்களை தடுக்கும் முகமாக இடம் பெறும் சோதனை நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (32)

# "போரும் சமாதானமும்" நூல்வெளியீட்டு விழா






படங்கள்:-எழிலன்

## அமெ. மருத்துவ நிபுணரால் இரப்பை, குடல் நோய் சிகிச்சை

அமெரிக்காவிலிருந்து வருகை தந்திருக்கும் இரப்பை, குடல் நோயியல் நிபுணரான, மூர்த்தி அவர்களினால் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள டாக்டர். பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் இரப்பை சிறுகுடல், பெருங்குடலில் ஏற்படும் நோய்களிற்கு குறிப்பாக இரப்பைப் புண் வயிற்றுநோ, மலத்துடன் இரப்பை வெளியேறுதல் போன்றவற்றிற்கு நவீன மருத்துவ கருவிகளைப் பயன்படுத்தி மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு சிகிச்சை வழங்கப்படவுள்ளது. இச் சிகிச்சை இன்று முதல் 16.03.2005 வரை காலை 8.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளதால் பயன்பெற விரும்புவோர் வெளி நோயாளர் பகுதியுடன் தொடர்பு கொள்ளவும்.

# நான்காவது இடைக்கால குடியிருப்பு வடமராட்சி கிழக்கில் திறந்துவைப்பு

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இடைக் காலக் குடிமனைகளைக் கொண்ட குடியிருப்புக்களை அமைக்கும் வேலைத்திட்டச் செயற்பாடுகளைத் துரிதமாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்தி வருகின்றது.



அதற்கமைய வடமராட்சி கிழக்கில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒழுங்கிணைந்த செயற்பாட்டுக் கூடாக இது வரையில் நான்கு குடியிருப்புக்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் வடமராட்சி கிழக்கிலுள்ள செம்பியன் பற்று வடக்கில் 60 இடைக்கால குடிமனைகளைக்கொண்ட குடியிருப்பு ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் சேவாலங்கா நிறுவனத்தால் அமைக்கப்பட்ட இக்குடியிருப்புக் கையளிப்பு நிகழ்வு சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களில் ஒருவரான கிறீஸ் வின்சன் அவர்கள் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நிகழ்வுச்சுடரினை தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே. பி. றெஜி போரூட் நிறுவனப் பிரதிநிதி, சேவாலங்கா நிறுவனப் பிரதிநிதி, கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் மகளிர் பொறுப்பாளர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தலைமை உரையினையடுத்து சிறப்புரைகள் இடம்பெற்றன. யாழ். மாவட்ட கடற்புலிகளின் தளபதி சலீம் , பொதுமக்கள் சார்பாக மருதநாயகம் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தியிருந்தனர். இதனைத் தொடர்ந்து அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்கள் முறைப்படி குடியிருப்பினைத் திறந்து வைக்க மக்களிடம் குடிமனைகள் கையளிக்கப்பட்டன.

### திருத்தம்

நேற்றைய ஈழநாதம் தினசரியில் 12 ஆம் பக்கத்தில் வத்திராயன் பகுதியில் வீடுகள் கையளிக்கப்பட்டதாக வந்த செய்தி தவறாகும் உடுத்துறைப் பகுதியில் என்பதே சரியானதாகும்.


*—பொருண்மிய மதியுரையகத்தால்—*

# சூரிய மின்கலத் தொகுதி மூதாளர் பேணலகத்திற்கு அன்பளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

யூ.கே ரெக் நிறுவன நிதி உதவியுன் பொருண்மிய மதியுரையகத்தினால் அன்புச்சோலை மூதாளர் பேணலகத்திற்கு சூரிய மின்கலங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

அன்புச்சோலை மூதாளர் பேணலகத்திலுள்ள பெண்கள் விடுதிக்கு இரண்டு சூரியமின்கலங்களும், நோயாளர் விடுதிக்கு ஒரு சூரிய மின்கலமுமாக மொததம் மூன்று சூரிய மின்கலங்களை நேற்று வழங்கியுள்ளனர்.



மேற்படி அன்பளிப்புப் பொருட்கள் வழங்கும் வைபவமனாது அன்புச்சோலை மூதாளர் பேணலகத் தலைவர் அ. கனகரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

அதன் ஆரம்ப நிகழ்வாக பொது ஈகச்சுடரினை மூன்று மாவீரார்களின் தந்தையாரும், அன்புச்சோலை பயனாளியுமான மு.கறுப்பையா ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பக துணைப் பொறுப்பாளர் பரஞ்சோதி ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மூதாளர் பேணலக அலுவலகத்தில் வைத்து சூரிய மின் கலங்களை யூ.கே. ரெக் பிரதிநிதி சு. விஜயதேவ அவர்கள் அன்புச்சோலை கட்டட நிர்மாணப் பொறுப்பாளர் விக்கியிடம் கையளித்ததுடன் சிறப்புரையுமாற்றினார்.

அதனையடுத்து அன்புச்சோலை மூதாளர் பேணலக நிர்வாக உத்தியோகத்தர் வதனி அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

## அன்ரன்....

என்னும் தலைப்பில் மிகச் சிறப்பான ஒரு உரையை வழங்கியதுடன் நூலின் சிறப்பையும் எடுத்துரைத்தார். இந்த வரலாற்று ஆவண நூல் பல் கலைக்கழகங்களின் வரலாற்றுப் பிரிவில் பாடவிதான நூலாகப் பயன்படுத்தப்பட பரிந்துரைப்பதில் அனைவரினதும் பங்களிப்பை விதந்துரைத்தார்.

இறையியல் ஆய்வாளரும் தத்துவாசிரியருமான வணக்கத்திற்குரிய மேரியன்ஸ்சோமாவில் என்ற ஆங்கிலப் பெண்மணி 'விடுதலைப் பயணமும் சமாதானமும்' என்ற தலைப்பில் ஆய்வுரை வழங்கினார்.

ஒரு அரசாங்கம் தனது சொந்த நாட்டுக் குடிமக்களை அடக்கி ஒடுக்குவதையும், அராஜகத்தை கட்டவிழ்த்து விடுவதையும் தன்னால் புரிந்து கொள்ள முடியவில்லையென்றும் இது குறித்து தான் வெட்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சனநாயக விழுமியங்களை சரியான முறையில் கடைப்பிடித்து வரும் கனடா போன்ற நாட்டு அரசுகளிடம் கூட 25 வருடங்களுக்கு மேலாக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள உதவும் படி கெஞ்ச வேண்டியிருப்பதையும் அப்படிக் கெஞ்சியும் கனேடிய அரசு பாராமுகமாக இருப்பதையும் தன்னால் ஜீரணிக்க முடியவில்லையென்றும் அவர் தனது பேச்சில் குறிப்பிட்டார். இதனையடுத்து எழுத்தாளர் வி.தங்கவேலு "வரலாற்றின் அவசியமும் அவற்றை சரியாக ஆவணப்படுத்தலும்" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

பின்னர் நூலை அறிமுகம் செய்து வெளியிட்டும் வைத்தார். கலாநிதி சிறிபவான் சிறிஸ்கந்தராஜா அவர்கள் தமிழரின் விடுதலை உணர்வைத் தக்க வைக்க தமிழர்கள் அனைவரின் ஒன்றிணைந்து செயலாற்றும் அவசியத்தை எடுத்துரைத்தார். இனவாத உணர்வில் சிக்குண்டு கிடக்கும் சிங்கள மக்களை விடுவிக்க வேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளதென்று குறிப்பிட்ட அவர் தமிழினத்தின் ஒற்றுமையை வளர்ப்பதுடன் கனேடிய மக்களுக்கும் எமது விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலையை விளக்குவது ஒவ்வொருவரின் கடமை என்றும் குறிப்பிட்டார்.

இந்நூலின் முதற்பிரதியை நியூயோர்க் பாராளுமன்ற உறுப்பினர் யூடியின் சார்பில் அவரது செயலாளர் பெற்றுக் கொண்டார்.

இரண்டாவது பிரதியை பிரபல கலைஞரும், இசைக்கு ஏது எல்லையென்ற நிகழ்ச்சிப் பொறுப்பாளருமான வைரமுத்து சொர்ணலிங்கம் பெற்றுக் கொள்ள அதைத் தொடர்ந்து ஏராளமான வர்த்தகப் பிரமுகர்கள், கலைஞர்கள் மற்றும் அறிஞர், பொது மக்களும் பிரதிகளைப் பெற்றுக் கொண்டார்கள்.

## இந்தியாவிலிருந்து...

இச்சந்திப்பில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், மன்னார் மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இனியவன், யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். நாடு திரும்பும் அகதிகளுக்கு இழைக்கப்படும் கொடூரங்கள் தொடர்பாக இச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இவர்களது விடயங்கள் தொடர்பில் உடனடியாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதாக அரச அதிபர் உறுதியளித்தார். (18)

## மக்கள்...

திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தொன்று சாவகச்சேரி நகரப்பகுதியினில் வைத்து தாக்கப்பட்டது. அதனையடுத்து படையினரது காவலரண்கள் எரிப்பு, படைமுகாங்கள் மீதான கல்வீச்சு எனத் தொடர்ந்தது.

குறிப்பாக வெள்ளிக்கிழமை தீயிடப்பட்ட படையினரது காவலரண்கள் மீள நிர்மாணிக்கப்பட்டிருந்த நிலையில் அவை மீண்டும் தீயிடப்பட்டது. குறிப்பாக காவலரண்கள் அமைக்கப் பயன்படுத்தப்பட்ட மரங்கள், வளைகள், அஸ்பெஸ்டஸ் சீற்றுக்கள் ஓரிடத்தில் குவிக்கப்பட்டு தீயிடப்பட்டது.

பின்னர் சாவகச்சேரி-யாழ்.நகர் வீதியிலுள்ள ஈ.பி.டி.பி அமைப்பின் அலுவலகம் முன்பாக குவிந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அவர்களை வெளியேறுமாறு கோசமிட்டு எதிர்ப்பில் ஈடுபட்டனர். அலுவலகம் மீது கல்வீச்சும் இடம் பெற்றது. அவ்வேளை ஏற்கனவே அங்கு தயாராக இருந்த பொலிசாரும்,படையினரும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததுடன் கண்ணீர்ப் புகைக்குண்டுகளையும் வீசினர். தொடர்ந்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்டோர் அருகிலுள்ள படைமுகாங்கள் மீதும் கல்வீச்சை மேற்கொண்டதுடன், படையினருக்கு எதிராக கோஷங்களையும் எழுப்பினர்.

இதனிடையே நேற்று மாலை இடம் பெற்ற படையினரின் தாக்குதலில் காயமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் இருவர் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏ-9 வீதியூடான போக்குவரத்து மாலை வேளை வரை துண்டிக்கப்பட்டிருந்த நிலையில் மாற்றுப்பாதைகளூடாகவே போக்குவரத்துக்கள் தொடர்ந்தன.

இதேவேளை சாவகச்சேரிப் பகுதியில் இயல்பு நிலையை ஏற்படுத்துவது தொடர்பில் நேற்றுச் சந்திப்புக்கள் இடம்பெற்றுள்ளன. நேற்றுப் பகல் 11.30 மணியளவில் சாவகச்சேரி நகர வர்த்தகர் சங்கக் கட்டடத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் வர்த்தக சங்கத்தினர், அரசியல் துறையினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் மற்றும் பொலிஸ் தரப்பினர் கலந்து கொண்டனர்.

இதன்போது சாவகச்சேரி நகரப் பகுதியிலுள்ள இராணுவக் காவலரண்கள் அகற்றப்பட வேண்டும். சேதமாக்கப்பட்ட வாகனங்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்பன உட்பட பல்வேறு விடயங்கள் வலியுறுத்தப்பட்டன. பொலிசாருக்குப்பதில் இராணுவத்தினரை நிறுத்தியிருப்பதை சுட்டிக்காட்டி அவர்களை நீக்குமாறும் வலியுறுத்தப்பட்டது.

எனினும் நேற்றிரவும் பெருமளவு படையினரும், கலகமடக்கும் பொலிசாரும் நிறுத்தப்பட்டிருந்ததால் பதற்ற நிலை காணப்பட்டது. (28,33,27)

## மன்னாரில்....

தலைப்புலிகள் அலுவலகங்கள் மீது குண்டு வீசித் தாக்கியமை மற்றும் பொதுமக்கள் மீதான பாலியல் வல்லுறவு முயற்சிகள் தொடர்பாக மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரால் இச்சந்திப்பில் சுட்டிக் காட்டப்பட்டது.

இப்படியான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது. இதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (18)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது